




விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 40 குரோதி ஆண்டு கார்த்திகை மாதம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (03.12.2024)







# தமிழ் இளைஞர்களை படையில் இணைக்கவில்லை: ரஷ்யா மறுப்பு

## உன்னிப்பாக அவதானிக்கின்றோம் என்கிறது தூதரகம்

(ஆர்.மனோசங்கர்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் உக்ரைனிற்கு எதிராகப் போரிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதாக வெளியான தகவல்களை இலங்கைக்கான ரஷ்ய தூதரகம் மறுத்துள்ளது.


அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ரஷ்ய தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் பெல்ஜியத்திற்கு செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் உக்ரைனிற்கு எதிராகப் போரிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என அண்மையில் காணொளி ஒன்று வெளியாகியிருந்தது.

குறித்த காணொளியில் இராணுவ உடையணிந்து பேசிய யாழ். இளைஞர்கள், ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டு,உக்ரைனுக்கு எதிராகப் போரிடுவதாக கூறியிருந்தனர்.

எனினும், இதனை முற்றிலும் மறுத்துள்ள ரஷ்ய தூதரகம், இவ்வாறான தகவல்கள் ஆதாரமற்றவை மற்றும் அடிப்படையற்றவை என்றும் கூறியுள்ளது.




PRESS-RELEASE
of the Russian Embassy in Colombo

December 02, 2024

On the alleged forced involvement of Jaffna youthsinto participating in the Ukrainian conflict

The Embassy paid attention to a series of recent news regarding the situation where some young men from Jaffna were reportedly forcefully made to fight againstUkraine while attempting to travel to France and Belgium via a visit visa.

The Embassy would like to stress the groundless nature of such messages. We are closely monitoring any unverified data, the goal of which is to discredit traditionally friendly Russian-Sri Lankan relations. The Russian authorities respect all foreigners arriving in our country and are ready to provide them with job opportunities in accordance with their personal choice, competencies and available vacancies. It is also necessary to take into consideration that the issues relatedto the Sri Lankan citizens staying in Russia are primarily dealt with by the Sri Lankan Embassyin Moscow.

Besides, the Embassy has not received any official information about ...dingSri Lankan citizens to Russia by local unscrupulous travel agencies. At the ...e time, we are poised to assist in the investigation of such activities in case we ...ivea request from the Sri Lankan side.

- Russian Embassy in Colombo

எவ்வாறாயினும், இந்த தகவல் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். மேலும், இலங்கை ரஷ்யா இடையிலான பாரம்பரிய நட்புறவை சீர்குலைக்கும் நோக்கில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக அறிக்கையில் (தொடர்ச்சி...)

02

## நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

நாடாளுமன்றம் இன்று (03) முதல் டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி வரை கூடவுள்ளது. இதன்படி, ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான பிரேரணை இன்று (03) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இன்று காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை இது தொடர்பான விவாதம் நடைபெறும்.

## உயர்தர பரீட்சை மீண்டும் நாளை

(முகம்மட் முக்தார்)

அசாதாரண காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த.உயர்தர பரீட்சைகள் நாளை(04) மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமான மேற்படி ( தொடர்ச்சி)

02

## கல்வி அமைச்சுக்கு முன் ஆர்ப்பாட்டம்: கலைக்க முற்பட்டதில் 2 பொலிஸ் காயம்

(எஸ்.டெரரின்)

இசுருபாய கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று(02) நண்பகல் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை அடுத்து பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரும் இரண்டு கொன் ஸ்டபிள்களும் காயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கல்வி (தொடர்ச்சி.)




02

## மாகாண சபை முறைமை: அகற்றுவதை ஏற்க முடியாது

### மனோகணேசன் எச்சரிக்கை

"மாகாணசபையை அகற்றி விட்டு அதற்குப் பதில் நாடு தழுவிய, சம உரிமையைத் தருவோம்" என தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் கூறுகிறார்கள். சம உரிமை வருவது நல்லதே. ஆனால், (தொடர்ச்சி.)



02



நுவரெலியா பிரதேச செயலகத்தில் அஸ்வெசும நலன்புரி விண்ணப்ப படிவங் களை பெற்றுக்கொள்வதற்காக இரு நாட்களாக நீண்ட வரிசையில் காத்திருந்த பொது மக்கள் நேற்று ஒரே நேரத்தில் ஒன்றுகூடியபோது எடுக்கப்பட்ட படம். திணைக்கள உத்தியோகஸ்தர்கள் எவரும் வரிசையினை நெறிப்படுத்தவில்லை என குற்றம் சாட்டப்படுகிறது.

(படம்- டி.சந்ரு செ.திவாகரன்)

## சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லம் கையளிப்பு

(கனூஷியா புஷ்பகுமார்)

முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் அமரர் ஆர். சம்பந்தனுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லம் அரசாங்கத்திடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. அமரர் ஆர். சம்பந்தன் உயிரிழந்து (தொடர்ச்சி..)

02

## தரம் 5 புலமைப்பரிசில்: மீண்டும் நடத்துவது பொருத்தமற்றது

### -சட்டமா அதிபர் உயர் நீதிமன்றுக்கு அறிவிப்பு

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் இலவச புள்ளிகளை வழங்குவதற்கு அமைச்சரவை பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று (02) உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார். பரீட்சை வினாத்தாள் கசிந்த சம்பவத் தையடுத்து இந்த பரீட்சையை மீண்டும் நடத்துவது பொருத்தமற்றது என அமைச் சரவை பரிந்துரைத்துள்ளதாகவும், இதனால் மாணவர்கள் பாதிக்கப்படலாம் எனவும் சட்டமா அதிபர் விராஜ் தயாரத்ன உயர் (தொடர்ச்சி)

02

### நியாய விலையில் அரிசி விநியோகிக்க

## ஆலை உரிமையாளர்களுக்கு ஜனாதிபதி அநுர உத்தரவு

எதிர்வரும் மாதங்களில் நுகர்வோருக்குத் தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் தொடர்ச்சியாக அரிசி வழங்க வேண்டியதன் அவசியத்தை சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களிடம் எடுத்துரைத்த ஜனாதிபதி, அதற்காக எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்தும் அவர்களுடன் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (02) ஜனாதிபதி அலுவலகத்தில் நடை பெற்றது. (தொடர்ச்சி..)



02

## கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் கொடியேற்ற விழா ஆரம்பம்



( படம்: ஏ.எல். சினாஸ்)

( முகம்மட் முக்தார்)

சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் நினைவாக அம்பாறை மாவட்ட கல்முனை மாநகர மக்களால் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்டு வரும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூ*ர் ஆண்டகை தர்ஹாவில் 203 வது கொடியேற்று விழா நேற்று (2) திங்கள் கிழமை ஆரம்பமாகியது.

கல்முனைக்குடி முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாச (தொடாச்சி.)

02

## வடமராட்சியில் பறந்த புலிக் கொடி: தீவிர விசாரணையில் பொலிஸார்

யாழ். வடமராட்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சின்னத்துடனான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை மற்றும் விடுதலைப்புலிகளின் கொடியைப் பறக்க விடப்பட்டமை தொடர்பான விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

உடுப்பிட்டியில் கடந்த 26ஆம் திகதி விடுதலைப்புலிகளின் சின்னத்துடனான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மறுநாள் 27ஆம் திகதி உடுப்பிட்டியில் புலிக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது. இவை தொடர்பில் (தொடர்ச்சி..)

02

## இடையில் நிறுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை மீண்டும் முன்னெடுங்கள்

### ஜப்பானிய தூதுவரிடம் கோருகிறார் எதிர்க்கட்சித் தலைவர்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஜப்பான் தூதுவர் அகியோ இசோமடாவுக்கும் (Isomata Akio) இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் (01) கொழும்பில் இடம்பெற்றது.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடை யில் நீண்ட காலமாக இருந்துவரும் இராஜதந்திர உறவை (தொடர்ச்சி.)

02

## புதிய பிரதம நீதியரசராக முர்து பெர்னாண்டோ



இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக, உச்ச நீதிமன்ற நீதியரசர் முர்து நிருபா பிதுஷினி பெர்னாண்டோ நேற்று காலை (02) ஜனாதிபதி அலுவலகத்தில் (தொடர்ச்சி..)

02

# அட்டாளைச்சேனை பாவங்காய் வீதியில் புதிய பாலம் அமைக்க நடவடிக்கை

(எஸ்.எம்.அறூஸ்)

தேசிய மக்கள் சக்தியின் அம்பாரை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா அட்டாளைச்சேனை பிரதேசத்திற்கு விஜயம் செய்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல இடங்களையும் பார்வையிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரும், ஒலுவில் பிரதேச அமைப்பாளருமான சுல்தான் சத்தாரின் அழைப்பின் பேரில் விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா, சம்பு நகர் – ஆலம் குளம் கிராமத்திற்கு செல்லும் டொக்டர் ஜலால்தீன் பாவங்காய் வீதியில் உள்ள நீர் வழிந்தோடும் 12ம் குழாய்ப் பகுதியை பார்வையிட்டார்.

மழை மற்றும் பெரும் வெள்ளம் ஏற்படும் காலப்பகுதியில் 12ம் குழாயினூடாக நீர் வழிந்தோடுவது குறைவாக இருப்பதாலும், தடை ஏற்படுவதாலும் இப்பகுதியில் உள்ள விவசாயக் காணிகள், வீதிகள் மற்றும் குடியிருப்பு நிலங்கள், அரச அலுவலகங்கள் முற்றாக நீரில் மூழ்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இக்குழாய்கள் ஆற்றுவாழைகளால் அடைக்கப்பட்டு நீரோட்டத்தை தடை செய்தமையால், இப்பகுதியில் உள்ள விவசாய காணிகள், குடியிருப்பு நிலங்கள், அரச அலுவலகங்கள், வீதிகள் என்பன நீரில் மூழ்கியதால், விவசாயிகள், பொது மக்கள், அரச அலுவலர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சுல்தான் சத்தார், அட்டாளைச்சேனை அறபா வட்டார அமைப்பாளர் ஏ.பீ. மர்ஜான், தைக்காநகர் வட்டார அமைப்பாளர் இம்தியாஸ் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்களான அலி அக்பர், ஏ.பீ. நியாஸ் உள்ளிட்ட பலரும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இவ்விடத்தில் புதிதாக பாலம் ஒன்றை அமைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

மேற்படி கட்சி முக்கியஸ்தர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா, குறிப்பிட்ட இடத்தில் பாலம் அமைக்கப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். அத்தோடு, மிக விரைவாக உரிய அமைச்சரின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டு சென்று புதிய பாலம் அமைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

# கிளிநொச்சியில் எலிக்காய்ச்சல் பரவும் ஆபத்து

வெள்ள அனர்த்தத்தின் பின்பு எலிக்காய்ச்சல் பரவும் ஆபத்து இருப்பதால், மக்கள் விழிப்பாக செயற்படுமாறு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. வினோதன் எச்சரித்துள்ளார். கிளிநொச்சியில் நடந்த ஊடக சந்திப்பிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மை நாட்களாக நிகழ்ந்த வெள்ள அனர்த்தத்தினால் பெருமளவானோர் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தனர். இவர்கள் வெள்ள நீரில் பயணம் செய்திருந்தனர். வெள்ளநீரில் கலந்துள்ள எலியின் சிறுநீர் மூலம் பக்றீரியா தொற்று ஏற்பட்டு எலிக்காய்ச்சல் ஏற்படுகிறது.

# இந்திய கடற்பரப்பில் போதைப் பொருளுடன் கைதான சந்தேக நபர்கள் கொழும்பு துறைமுகத்தில்

இந்திய கடற்பரப்பில் ஐஸ் போதைப்பொருளை ஏற்றிச் சென்ற இரண்டு இலங்கை மீன்பிடி படகுகளும், அதில் பயணித்த சந்தேக நபர்களும் கொழும்பு துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினர் இவர்களை நேற்று திங்கட்கிழமை கொழும்புக்கு அழைத்துவந்துள்ளது.

இந்திய கடற்படைக்கும் இலங்கை கடற்படைக்கும் இடையே நடந்த உளவுத்துறை பரிமாற்றத்தை தொடர்ந்து குறித்த இரண்டு கப்பல்களையும் இந்திய கடற்படை பொறுப்பேற்றது.

அதில் ஒரு படகில் சுமார் 400 கிலோ ஐஸ் போதைப்பொருள் இருந்ததாகவும், மற்றைய கப்பல் உதவிக்காக சென்றுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நீண்டநாள் மீன்பிடிப் படகுகளுடன் சந்தேகநபர்களை இந்திய கடற்படையினர் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்களையும் ஐஸ் போதைப்பொருளையும் இந்திய கடற்படையினர் கடந்த 29ஆம் திகதி இலங்கை கடற்படை கப்பலான கஜபாகுவிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், சட்ட நடவடிக்கை களுக்காக சந்தேகநபர்களையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் நீதிமன்றில் ஒப்படைக்க கடற்படை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## நியாய விலையில்...

இதன்போது, தட்டுப்பாடு இன்றி, நியாயமான விலைகளில் மக்களுக்கு தொடர்ச்சியாக அரிசி விநியோகிப்பதன் அவசியம் குறித்து ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். மக்களுக்குத் தட்டுப்பாடின்றி அரிசியை வழங்கும் வகையில் நாட்டில் களஞ்சிய வசதி களை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு பெறுமதி சேர்க்கும் உற்பத்திகளுக்கு நாட்டு அரிசியை பயன்படுத்துவதால், நுகர்வுக்குத் தேவையான இருப்புகளில் தட்டுப்பாடு நிலவுவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. உரமானியத்தை தேசிய உற்பத்திக்கான செயற்திறனுடன் பயன்படுத்தும் நோக்கில் QR குறியீட்டு முறைமை அறிமுகப்படுத்துவது தொடர்பிலும் இங்கு ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

வர்த்தகம்,வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு,கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, லக் சதொச தலைவர் கலாநிதி சமித்த பெரேரா மற்றும் சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் உள்ளிட்டோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## மாகாணசபை...

சம உரிமை என்பது வேறு. அதிகார பகிர்வு என்பது வேறு என்பதை அவர்கள் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது,

"சம உரிமை வருவது நல்லதே. ஆனால், சுலபமான காரியம் அல்ல. இன, மத, மொழி ரீதியாக சம உரிமைகள் இந்நாட்டில் உறுதிப் படுத்த இன்னமும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும்.

இங்கே இன்று அரசியலமைப்பிலேயே, இந்நாட்டின் மொழிகள், மதங்கள் மத்தியில் சம உரிமை உறுதிப் படுத்தப்படவில்லை. அரச மதமான பௌத்த மதத்துடன் பௌத்த தேரர்கள், இந்நாட்டின் அதிகார மையத்தில் இருக்கிறார்கள். மொழி தொடர்பில் சில பலவீனமான சட்டங்கள் ஆங்காங்கே இருந்தாலும், அவற்றை நடைமுறைப் படுத்த இந்நாட்டின் அரச அதிகார வர்க்கம் இடம் கொடுப்பதில்லை. மொழிகள் மத்தியில் சம உரிமையை அமுல் செய்ய பாடுபட்ட எனக்கு இது நன்கு தெரியும்.

நல்லாட்சியின் போது, புதிய அரசியலமைப்பு உருவாக்கும் முயற்சி நடந்து. அதற்கான வழிகாட்டல் குழுவில் இன்றைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அங்கத்துவம் பெற்று பணியாற்றினார். நானும் வழிகாட்டல் குழுவில் இடம் பெற்றேன். இன்னமும் பல இன, மத, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வழிகாட்டல் குழுவில் அங்கத்துவம் வகித்தார்கள்.

ஆகவே அத்தகைய புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் போது, இவை பற்றி சிநேகபூர்வகமாக கலந்து பேசி, வாத, விவாதம் செய்து, தீர்மானங்களுக்கு வரலாம். ஆனால், இப்போதே அவசரப்பட்டு, "மாகாணசபையை அகற்றியே தீருவோம். அது ஜேவிபியின் கொள்கை. அது மாறவில்லை. ஜேவிபியும், தேசிய மக்கள் சக்தியும் ஒன்றுதான்" என ஒருதலைபட்சமாக ஜேவிபியின் பொதுச் செயலாளர் நண்பர் டில்வின் சில்வா கூறுவது ஏற்புடையதல்ல." என்றார்.

## தமிழ் இளைஞர்கள்..

கூறப்பட்டுள்ளது.

எங்கள் நாட்டிற்கு வருகை தரும் அனைத்து வெளிநாட்டவர்களையும் ரஷ்ய அதிகாரிகள் மதிக்கின்றனர். அவர்களின் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளை வழங்கவும் தயாராகவுள்ளனர்.

மேலும், ரஷ்யாவில் தங்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பான விடயத்தினை மொஸ்கோவில் உள்ள ரஷ்யாவிற்கான இலங்கை தூதரகமே கையாள்கின்றது.

மேலும், மோசடியான முறையில் இலங்கையர்களை ரஷ்யாவிற்கு அனுப்பும் முகவர்கள் குறித்து தூதரகத்திற்கு எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லை.

எனினும், இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங்கத்திடமிருந்து உதவிகள் கோரப்பட்டால் அதற்குத் தேவையான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய உயர்ஸ்தானிகர் சபாநாயகருடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வலவை அண்மையில் (28) பாராளுமன்றத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் பங்கேற்றிருந்தார்.

இந்த சந்திப்பில் புதிய சபாநாயகருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த இந்திய உயர்ஸ்தானிகர், இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் நீண்டகாலமாகக் காணப்படும் தொடர்பை நினைவுகூர்ந்தார். மேலும், இரண்டு நாடுகளினதும் பாராளுமன்றங்களுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்றப் பணியாளர்களுக்கான பரிமாற்றத் திட்டங்களை மேற்கொள்வதற்கும் எதிர்பார்ப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் காணப்படும் தொடர்புகளை தொடர்ந்தும் வலுவாகப் பேணுவதற்கும், பத்தாவது பாராளுமன்றத்தில் இலங்கை – இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற நட்புரீதியான கலந்துரையாடலில், பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாகவும் தொழில்நுட்ப அறிவைப் பரிமாறிக்கொள்ளுதல் போன்ற இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

## கல்வி அமைச்சு ...

அமைச்சுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குழுவை பொலிஸார் கலைக்க முற்பட்டதால் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையின் போதே மேற்படி பொலிஸார் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

தம்மை ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக்குமாறு கோரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பத்தரமுல்லையில் இருந்து கல்வி அமைச்சுக்கு பாதயாத்திரையாக சென்றனர். அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் போராட்டம் காரணமாக கல்வி அமைச்சுக்கு முன்பாக கொட்டாவை – பொரளை வீதி போக்குவரத்து முற்றாக தடைப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## உயர்தர பரீட்சை...

நாட்டில் ஏற்பட்ட பாரிய வெள்ளம், புயல் அச்சுறுத்தல் என்பன காரணமாக கடந்த மாதம் 27ம் திகதிமுதல் இன்று(03) வரை ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பரீட்சைக்கு 333,185 பரீட்சார்த்திகள் 2312 பரீட்சை நிலையங்களில் தோற்றுகின்றனர். இவர்களில் சுமார் 77,000 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர்.

சீரற்ற காலநிலை காரணமாக நவம்பர் 27 ம் திகதி முதல் டிசம்பர் 03 ம் திகதி வரை நடைபெறாத பாடங்கள் டிசம்பர் 21 முதல் 30 வரை நடைபெறவுள்ளது. இதற்கான விசேட நேரசூசி பரீட்சை திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் மேலும் அறிவித்துள்ளார்.

## வடமராச்சியில்...

வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றதையடுத்து , பொலிஸார் அவ்விடத்துக்குச் சென்று அவற்றை அகற்றியதுடன், அவற்றை சான்றுப்பொருளாக பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## புதிய...

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இலங்கையின் பிரதம நீதியரசர் பதவியை வகிக்கும் இரண்டாவது பெண்ணாகவும், இலங்கையின் 48ஆவது பிரதம நீதியரசராகவும் முர்து பெர்னாண்டோ வரலாற்றில் இணைகிறார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஓய்வுபெற்றதையடுத்து வெற்றிடமான பதவிக்கு அவரது பெயர் அரசியலமைப்புச் சபையினால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்ட அவர் 1997 ஆம் ஆண்டு பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகவும் 2014 ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்றார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரசதரப்புச் சட்டத்தரணியாக இணைந்து 30 வருடங்களுக்கும் மேலாக அங்கு பணியாற்றியுள்ள முர்து பெர்னாண்டோ, 2018 மார்ச் மாதம் உச்ச நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார். முர்து பெர்னாண்டோ சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாக கடமையாற்றியதுடன், உச்ச நீதிமன்றத்தின் தற்போது பணியாற்றும் சிரேஷ்ட நீதிபதி இவராவார். மொரட்டுவ பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியின் பழைய மாணவியான முர்து பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் சட்டத்துறை இளமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.

## கல்முனை...

(லிலிருந்து புனித கொடியானது உலமாக்கள், பக்கீர் ஜமாஅத்தினர், நிருவாகிகள், ஊர்மக்கள் புடைசூழ தீன் கலிமா முழக்கத்துடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹாவில் உள்ள மினாராக்களில் ஏற்றி வைக்கப்பட்டது.

கொடியேற்றப்பட்ட தினத்திலிருந்து தொடர்ந்து 12 நாட்களுக்கும் பாதுஷா சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்களின் மீதான புனித மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமாஅத்தினரின் புனித றிபாஈ றாதிப், உலமாப் பெருமக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளதோடு கொடி இறக்கப்படும் தினமான எதிர்வரும் டிசம்பர் 14 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் தமிழ், சிங்கள மக்களும் இக்கொடியேற்ற வைவபங்களில் கலந்து கொள்வது சிறப்பம்சமாகும்.

அன்றைய தினம் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தரம்5...

நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்ட விதத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணையின் போதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான மேலதிக விசாரணையை டிசம்பர் 11ஆம் திகதி நடத்தவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

## சம்பந்தனின்...

ஐந்து மாதங்களின் பின்னர், அவரது மகள் மூலம் குறித்த உத்தியோகபூர்வ இல்லம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைக்குமாறு பலமுறை ஞாபகமூட்டல்கள் வழங்கப்பட்டதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன.

கொழும்பு 7இல் மலலசேகர வீதியில் உள்ள குறித்த உத்தியோகபூர்வ இல்லமானது கடந்த 2015ஆம் ஆண்டில் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஆர். சம்பந்தனுக்கு வழங்கப்பட்டிருந்தது.

நல்லாட்சி காலத்தில் முன்னாள் அமைச்சர் கயந்த கருணாதிலக மூலம் 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின்படி, அமரர் சம்பந்தனுக்கு குறித்த உத்தியோகபூர்வ இல்லத்தை அவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பதவி வகிக்கும் வரையில் பயன்படுத்த வழங்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லம் சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

அதன் பராமரிப்பு பணிகள் அனைத்தும் கடந்த காலத்தில் அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

அந்த உத்தியோகபூர்வ இல்லம் கடந்த 12ஆம் திகதி அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என அமரர் இரா. சம்பந்தனின் மகள் எழுத்து மூலம் அமைச்சுக்கு அறிவித்திருந்த போதிலும் அன்றைய தினம் அது கையளிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மஹிந்தானந்தவுக்கு எதிரான வழக்கு மீண்டும் விசாரணை

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் வர்த்தக அமைச்சருமான நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

பிரதீப் ஹெட்டியாராச்சி, பிரதீப் அபேரத்ன மற்றும் மஹேன் வீரமன் ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, சதொச ஊடாக 14,000 கேரம் பலகைகளை கொள்வனவு செய்ததன் மூலம் 53 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றம் சுமத்தியிருந்தது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

## இடையில்....

தொடர்ந்தும் பேணுமாறும், இதற்கு தன்னால் முடிந்த பங்களிப்பைப் பெற்றுத் தருவதாகவும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜப்பான் தூதுவரிடம் தெரிவித்தார்.

அவ்வாறே, கடந்த காலங்களில் ஜப்பானினால் இலங்கையில் முன்னெடுத்து வரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்குமாறும், இதற்குத் தேவையான பூரண ஆதரவை எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு தாம் வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தனவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.



# சீரற்ற காலநிலை: இறால் பண்ணைகள் கடும் பாதிப்பு
## தாங்கமுடியாத இழப்பு

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சமீபத்திய சீரற்ற காலநிலையின் காரணமாக கனமழை வெள்ளத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் கடுமையான பாதிப்பை எதிர்நோக்கியதாகத் தெரிவித்துள்ளனர்.

பண்ணையில் வளர்க்கப்பட்ட இறால்கள் இன்னும் சில வாரங்களில் பிடிப்பதற்காகத் திட்டமிட்டிருந்தபோது இறால்கள் அனைத்தும் நீரில் அடித்துச் செல்லப்பட்டமை பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியிருப்பதாக பாதிக்கப்பட்ட இறால் பண்ணையாளர்கள் கூறுகின்றனர். தங்களின் இறால் பண்ணை முழுவதும் வெள்ளம் சூழ்ந்ததையினால் பண்ணை வயல்களில் வளர்க்கப்பட்ட இறால்கள் அனைத்தும் வெள்ளத்தில் அழித்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கும் அவர்கள் இதனால் தங்களுக்கு சுமார் 30 கோடி ரூபாய் அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கரையாக்கன்தீவு கிராமத்தில் சுமார் 77 ஏக்கரில் 19 பண்ணையாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். வங்கியிலிருந்து கடன் பெற்றும் தங்களது தங்க நகைகளை அடகு வைத்தும் இறால் வளர்ப்பில் ஈடுபட்டு வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இழப்பைத் தங்களால் தாங்க முடியாத நிலையில் உள்ளமையினால் அழிவடைந்த இறால் பண்ணையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என பண்ணையாளர்கள் அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# அதிகரிக்கும் நிதி மோசடி வட்ஸ்அப் பயனர்களுக்கு
## விசேட அறிவிப்பு

வட்ஸ்அப் கணக்குகளை ஊடுருவி மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதால், மூன்றாம் தரப்பினருக்கு அவர்களின் தொலைபேசி இலக்கங்களில் பெறப்பட்ட சரிபார்ப்புக் குறியீட்டை வழங்க வேண்டாம் என இலங்கை கணினி அவசர பதில் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஹேக்கர்கள் WhatsApp குழுக்களில் இணைந்து பயனர்களின் கணக்குகளை கண்காணிப்பதாகவும் கணக்குகளை ஹேக் செய்த பின்னர், அவர்கள் கடன் கேட்டு ஹேக் செய்யப்பட்ட தொலைபேசியில் உள்ள எண்களுக்கு அவசர செய்திகளை அனுப்புவதாகவும் இலங்கை கணினி அவசர பதில் மன்றத்தின் மூத்த தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

அதன்படி, சமய நிகழ்ச்சிகள், பரிசுகளை வெல்வது அல்லது கல்வி நிகழ்ச்சிகளில் பங்கேற்பது போன்ற வாய்ப்புகளை குறிப்பிட்டு தொலைபேசி எண்ணில் பெறப்பட்ட இரகசிய குறியீட்டை அவர்கள் கோருவதாகக் கூறப்படுகிறது. தங்கள் வாட்ஸ்அப் கணக்கை ஹேக்கர்களிடம் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு இலகுவில் தங்கள் கணக்கிலும் உட்செல்ல முடியும் எனவும் கூறப்படுகின்றது. பின்னர் ஹேக்கர்கள் வாட்ஸ்அப் கணக்கை கட்டுப்படுத்தி, அந்த கணக்கில் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்களுக்கு பல்வேறு பிரச்சினைகளை கூறி அவசரமாக பணம் அனுப்புமாறு உரிய நபர் கோருவது போலவே மெசேஜ் அனுப்புகிறார்கள். ஆனால், அப்படி ஒரு செய்தி வந்தால், முதலில் அந்தக் கணக்கின் உரிமையாளரைத் தொடர்பு கொண்டு, அந்தத் தகவல் உண்மையா என்பதை உறுதி செய்து, வாட்ஸ்அப் கணக்கு ஹேக் செய்யப்பட்டதாகத் தெரிந்தால், அந்தக் கணக்கை வைத்திருப்பவர் உடனடியாக அவருடன் தொடர்புடைய ஏனையவர்களுக்கு அதைப் பற்றி தெரிவிக்கவும். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக இவ்வாறான நிதி மோசடிகளை இலங்கையிலிருந்து இல்லாதொழிக்க முடியும் என பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள்:
## குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் விசேட சலுகைகளை மீள்பரிசீலனை செய்வது தொடர்பில் ஆராய்வதற்காக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.டி. சித்ரசிறி தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்று (02) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சின் செயலாளர் நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளராக திருமதி கே.டி.ஆர்.ஒல்கா நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்று (02) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கே.டி.ஆர். ஒல்காவிற்கு கையளித்தார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** சூதாட்டத்தில் முதலீடு செய்தவர்களின் பணம் இழப்பு ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

**ரிஷபம்** கொண்டாட்ட மன நிலையில் இருப்பதால் பணத்தை இழக்க வாய்ப்புள்ளது.

**மிதுனம்** இன்று வணிகத்தில் நல்ல லாபம் கிடைக்கும் வாய்ப்பு கிடைக்கும். மகிழ்ச்சி பொங்கும்.

**கடகம்** பக்கத்து வீட்டாருடனான வாய்த்தகராறு உங்கள் மனநிலையை பாதிக்கும்.

**சிம்மம்** வேலைகளில் ஈடுபாடு காட்டுவதால் நோயை எதிர்க்க தயார்படுத்திக்கொள்ளலாம்.

**கன்னி** உங்களை ஈர்க்கக் கூடிய முதலீட்டுத் திட்டத்தில் பணத்தை செலவிடுங்கள்

**துலாம்** மன அழுத்தம் ஏற்படுத்துவதாகவும் இருக்கும் – ஆனால் பண அளவில் ஈடாக இருக்கும்.

**விருட்சிகம்** உங்களை காயப்படுத்த சிலர் விரும்பலாம் – உங்களுக்கு எதிராக வலுவாக செயல்படுவார்கள்

**தனுசு** குடும்பத்தினருடன் சமூக நிகழ்ச்சியில் பங்கேற்பது எல்லோரையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும்

**மகரம்** எந்தவொரு கடனாளியும் கேட்காமல் உங்கள் வங்கியில் பணத்தை போடலாம்

**கும்பம்** அதிகமான மகிழ்ச்சி சில பிரச்சினைகளை ஏற்படுத்தும், உற்சாகத்தைக் கட்டுப்படுத்துங்கள்

**மீனம்** உங்கள் வணிகத்திற்கு புதிய உயரங்களை நீங்கள் எட்டக்கூடும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** அமாவாசை திதி மதியம் 12:19 PM அதன் பிறகு பிரதமை திதி.
**நட்சத்திரம்:** அனுஷம் நட்சத்திரம் மதியம் 03:23 PM அதன் பிறகு கேட்டை நட்சத்திரம்.
**யோகம்:** மரண யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** அசுவினி, பரணி.
**இராகு காலம்:** மதியம் 04:30 PM முதல் 06:00 PM வரை,
**குளிகை:** மதியம் 03:00 PM முதல் 04:30 PM வரை,
**எமகண்டம்:** மதியம் 12:00 PM முதல் 01:00 PM வரை,

# 25 அடி உயரமான நத்தார் மரம்



(பாண்டிருப்பு கேதீஸ்)

நத்தார் மாதத்தை முன்னிட்டு கல்முனையில் 25 அடி உயரமான நத்தார் மரம் நேற்று முதலாம் திகதி முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டது. கல்முனை மெதடிஸ்த திருச்சபை தேவாலய வளாகத்தில் மக்கள் பார்வைக்காக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான இந்த நத்தார் மரம் பலரையும் ஈர்க்கும் வகையில் உள்ளது.

இதில் கல்முனை மெதடித்த திருச்சபையின் முகாமை குரு அருட். திரு. ரவி முருகுபிள்ளை, கல்முனை மெதடித்த திருச்சபையின் சிறுமியர் இல்ல பொறுப்பாளர் அருட் செல்வி சுலோஜினி, கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபர் கலையரசன், துறை நீலாவணை மெதடிஸ்த திருச்சபையின் அருட் சகோதரர். ஏ. கதிரேசன், கல்முனை பரலோக வாசல் திருச்சபையின் போதகர் அருட்திரு. கிருபை ராஜா, மற்றும் திருச்சபையின் மக்கள் கல்முனை பிரதேசத்தின் பொதுமக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# மூடப்பட்ட முஸ்லிம் பாடசாலைகள் மீண்டும் திறப்பு

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாணத்தில் நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக மூடப்பட்ட அனைத்து முஸ்லிம் பாடசாலைகளும் நேற்று(02) முதல் வழமைபோல் இயங்கத் தொடங்கியுள்ளன.

வெள்ளம், புயல் ஆபத்து காரணமாக கிழக்கு மாகாண முஸ்லிம் பாடசாலைகள் யாவும் கடந்த 26 ம் திகதி முதல் கிழக்கு மாகாண ஆளுனரின் விசேட உத்தரவையடுத்து மூடப்பட்டது.


பல பாடசாலைகள் வெள்ளநீரினால் பாதிக்கப்பட்டது.இவையாவும் பெற்றோர், பழைய மாணவர்களின் உதவியுடன் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சுத்தப்படுத்தப்பட்டன.

நேற்று திறக்கப்பட்ட முஸ்லிம் பாடசாலைகள் மீண்டும் மூன்றாம் தவணை முதலாம் கட்ட விடுமுறைக்காக எதிர்வரும் 13 ம் திகதி மூடப்பட்டு மீண்டும் 2025 ஜனவரி 02 ம் திகதி திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

க.பொ.த.உயர்தர பரீட்சை மண்டபங்களாக பயன்படுத்தப்படும் முஸ்லிம் பாடசாலைகள் கடந்த மாதம் 22 ம் திகதியுடன் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்த அரசாங்கத்துடன் மிக நெருக்கமாக செயல்படும் திறன் சீனாவுக்கு இருக்கிறது

(எம்.ஏ.அமீனுல்லா)



தற்போதைய அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமாகச் செயற்படும் திறன் சீனாவுக்கு இருப்பதாக மல்வத்து விகாரையின் மகாநாயக்கர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி பிற்பகல் மல்வத்து மகா விகாரைக்கு இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஷேன்ஹோங் விஜயம் செய்த போதே மல்வத்து மகாநாயக்கர் இதனைத் தெரிவித்தார்,

ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் உள்ளிட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த காலங்களில் சீனாவின் ஒத்துழைப்பினால் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டதாகவும், அதேபோன்ற ஆதரவை எதிர்காலத்திலும் இலங்கை மக்கள் எதிர்பார்ப்பதாகவும் வலியுறுத்தினார் சீனாவுடனான இலங்கையின் உறவு தேசியம் மற்றும் மதம் ஆகிய இரண்டின் அடிப்படையில் மிகவும் முக்கியமானது எனவும் மகாநாயக்கர் வண திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்தார்.

மஹாநாயக்கரிடம் ஆசிபெற்ற பின்னர் சீனத்தூதுவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இதுவரையில் ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களுடனும் சீனா ஒத்துழைத்து இலங்கையின் அபிவிருத்திக்கு ஆதரவை வழங்கியுள்ளனர். நட்புறவு வளர்வதற்கு பௌத்த துறவிகள் வழங்கிய ஆசிகளும் மிக முக்கியம் என கூறினார். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய வர்த்தக உடன்படிக்கை இலங்கைக்கு பல நன்மைகளை ஏற்படுத்தும் என நான் உறுதியளிக்கிறேன்

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நிலவும் நட்புறவை உடைக்கும் நோக்கில் சிலர் செயற்படுவதாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாக போர்ட் சிட்டி திட்டம் தொடர்பில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அறிகிறேன். .

துறைமுகங்களுக்குள் நுழைய சீனாவில் இருந்து விசா பெற வேண்டும் என்றும், அது இலங்கையில் உள்ள துறைமுகங்கள் அல்ல, சீனாவில் உள்ள துறைமுகங்கள் என்றும் தவறான பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன

இந்த தவறான தகவல்களால் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தவறான புரிதலை நீக்க வேண்டிய பெரும் பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளது என்றும் சீன தூதுவர் கூறினார்.

# சிப் அட்டைகள் உற்பத்தியில் இந்தியாவை உலகின் தலைநகராக்க ஜப்பான் யோசனை


சிப் அட்டைகள் உற்பத்தியில் இந்தியாவை உலகின் தலைநகரமாக்கும் கொள்கை குறித்து ஜப்பான் சொப்ட் வங்கியின் தலைவரும் பிரதம நிர்வாக அதிகாரியுமான மசாயோஷி சன் அண்மையில் தனது இந்திய விஜயத்தின்போது விளக்கமளித்துள்ளார்.

அத்துடன் தனது இந்திய விஜயத்தின் அங்கமாக பிரதமர் நரேந்திர மோடி, ஏனைய உயர் மட்ட அதிகாரிகள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளையும் கடந்த புதன்கிழமையன்று மசாயோஷி சன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவுத்துறை அதீத வளர்ச்சி கண்டுவரும் நிலையில் கூட இந்தியாவை உலகின் சிப் தலைநகரமாக மாற்றுவதற்கு தான் வகுத்துள்ள திட்டங்கள் குறித்து இச்சந்திப்புகளின் போது மசாயோஷி சன் கூறியுள்ளார்.

சிப்களை வடிவமைக்கும் அதீத திறன் காரணமாக புதிய சிலிக்கான் வலேயாக வளர்வதற்கான சகல சாத்தியங்களையும் இந்தியா கொண்டிருப்பதாக மசாயோஷி சன் நம்புவதாக இக்கலந்துரையாடல்களில் பங்கேற்ற ஒருவர் கூறினார்.

இதேவேளை, நாட்டின் சிப் உற்பத்தி , பொதியிடல் மற்றும் வடிவமைப்பு திறன் ஆகியவற்றினை மேலும் வலுவாக்கும் நோக்குடன் Indian Semiconductor Mission (ISM) திட்டத்தினை மத்திய அரசாங்கம் ஆரம்பித்திருந்தது. இதன் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக 10 பில்லியன் பட்ஜட் ஒதுக்கீட்டினை ஐஎஅ எதிர்பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.



ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# தமிழர்கள் நிராகரித்த 13ஐ கூட விரும்பாத அநுர அரசு

புதிய அரசாங்கம் புதுப் புது அரசியல் சர்ச்சைகளை முன்வைக்கிறது. நீண்டகால இனப் பிரச்சினையை ஆட்சிக்கு வந்தவுடன் தீர்ப்பதாக உறுதியளித்த அநுர அரசாங்கம் எதுவித நகர்வுகளையும் தற்போது வரையில் மேற்கொள்ளவில்லை. கொள்கை விளக்கவுரையில் கூட இனப்பிரச்சினை விவகாரம் உச்சரிக்கப்படவுமில்லை.

மாறாக, தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எதிரான விடயங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கான ஒரு உதாரணமாக, இலங்கையில் மாகாண சபை முறைமையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அறிவித்திருக்கிறார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன ஆகியோருக்கிடையே 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அதிகாரப்பரவலாக்கல் முறையாக 13ஆவது திருத்த சட்டம் கொண்டுவரப்பட்டது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் விதத்திலேயே இந்த 13ஆவது திருத்த சட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

எனினும், ஜே.ஆர் ஜயவர்தன அதனை முழு நாட்டிலும் அமுல்படுத்தியிருந்தார். குறிப்பாக இலங்கைத்தீவு ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு மாகாண சபைகள் முறையும் தோற்றுவிக்கப்பட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு,கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி 2006ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தது.

ஆக, அன்றிலிருந்தே இந்திய எதிர்ப்பு வாதத்தை முன்வைத்து வந்த மக்கள் விடுதலை முன்னணி, இன்று வரையில் இந்தியாவின் பிராந்திய விஸ்தரிப்பு கொள்கைகளையும் எதிர்த்து வருகிறது.

13 ஆவது திருத்தச் சட்டமும் அதன் கீழாக மாகாண சபை முறையும் இன நெருக்கடிக்குத் தீர்வல்ல என்று தமிழர்கள் 1987ஆம் ஆண்டே நிராகரித்துவிட்டனர்.

ஆனாலும், அரசியலமைப்பிலுள்ள மாகாண சபை முறைமையை அமுல்படுத்துமாறு கோரி சில தமிழ்த் தேசியக் கட்சிகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வருகின்ற போதிலும் கூட இன்று வரையில் அதனை நடைமுறைப்படுத்த இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் அனுமதிக்கவில்லை.

எனினும், புதிய அரசாங்கத்திலாவது தமக்கான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஜனாதிபதித் தேர்தலிலும் சரி, நாடாளுமன்றத் தேர்தலிலும் சரி கணிசமான அளவு தமிழ் மக்கள் அநுர அரசாங்கத்தை தெரிவு செய்திருந்தனர்.

ஆனால், தேசிய மக்கள் சக்தியின் தாய்க்கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தற்போது 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற ஒரு கதையை சொல்லியிருக்கிறார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதாக வாக்குறுதிகளை வழங்கி விட்டு ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொண்டவுடன் இவ்வாறான கருத்துக்களை முன்வைப்பது ஆட்சியாளர்களின் இயல்புதான். இது ஒன்றும் புதிய கதையல்ல.

முன்னரும் தனியார் தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் நிகழ்வில் கலந்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், தமிழர்களின் பிரச்சினை அரசியல் பிரச்சினை அல்ல என ரில்வின் சில்வா விமர்சனமிக்க கருத்து ஒன்றை முன்வைத்திருந்தார்.

இக் கருத்துகள் புதிய அரசாங்கத்தின் பிராந்திய மைய அரசியலில், யதார்த்த அரசியல் நிலைப்பாடாக தெரியவில்லை. இவ்விடயம் மிக பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் எதுவித சந்தேகங்களும் இல்லை.

புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை வேண்டும், அநுர அரசாங்கத்திடம் அந்த பெரும்பான்மை உண்டு. இப் பெரும்பான்மை மூலம் தாம் நினைத் ததை எல்லாம் செய்ய முடியும் என ரில்வின் சில்வா நினைப்பாராக இருந்தால், அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் சற்று சிந்திக்க வேண்டும்.

13ஆவது திருத்தத்தை சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது, இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு பிரசவம் தான் இந்த 13ஆவது திருத்தம். அதனை முற்றாக ஒழிக்க நினைப்பது பிராந்திய அரசியலில் சிறிய நாடான இலங்கையின் எதிர்கால நலன்களுக்கு ஆரோக்கியமானதுமல்ல.

தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசாங்கமானது ஜே.வி.பி யின் கொள்கைகளை அப்படியே கடைபிடித்து வருகின்றதா என்பது தொடர்பில் பல கேள்விகள் எழுந்துள்ளன.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராக தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கைகள் 13 ஐ விரும்பாத தமிழர்களுக்குக் கூட அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

புதிய அரசாங்கம் எந்தவொரு விதத்திலும் தமிழர்களுக்கு தீர்வு வழங்காது என்பது ஆரம்பம் முதலே தெரிந்த ஒரு விடயமாக இருந்தாலும், மாற்றம் எனும் பெயரில் அதனை முற்றாக ஒழிக்க நினைப்பது பாதகமான ஒரு சூழல் ஆகும்.

காலங்காலமாக தமிழர்களின் அரசியல் விடுதலை புறம் தள்ளப்பட்டு வரும் பின்னணியில் அரைகுறைத் தீர்வாக உள்ள மாகாண சபைகள் முறைமையை முற்றாக நீக்குவதால் ஏற்படப் போகும் ஆபத்துக்கள், அதிகார கதிரைக்கு புதியவர்களான ஜேவிபியின் முகத் தோற்றமான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினர் அறியாததல்ல.

ரில்வின் சில்வாவின் ஆலோசனைகளை அநுர பின்பற்றி வருவாராக இருந்தால் இலங்கைத்தீவு இனரீதியாக பல சர்ச்சைகளுக்கு முகங்கொடுக்கும் என்பது பகிரங்கம்.

இலங்கைத்தீவு பன்முகத் தன்மை கொண்ட ஆட்சி முறையை தெரிவு செய்யவில்லையானால் பொருளாதார முன்னேற்றமும் சாத்தியப்படாது.



# மதிப்புக்குரிய மாற்றுத் திறனாளிகள்

# மானிடப் பிறப்பில் ஊனமோ, அங்கவீனமோ ஒரு குறை அல்ல

**து. சிந்துஜா**

உலகளாவிய ரீதியில் அங்கீகாரத்தின் அடிப்படையில் பல தினங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன.

அந்த வகையில் இன்று சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இது உலக மக்கள் அனைவரும் மாற்றுத் திறனாளிகளின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களுக்கான மேன்மை மற்றும் உரிமைகள் முறையாக வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டு இந் நாள் தொடர்பிலான கலந்துரை யாடலின் பின்னர் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதியை பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

அன்றிலிருந்து இத் தினம் அவர்களுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

உலகளவில் 15 சதவீத மக்கள் ஏதாவது ஒரு வகையில் இயலாமையை அனுபவிக்கின்றனர். இதில் 80 வீதமானவர்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வசிக்கின்றனர்.

மாற்றுத் திறனாளிகளுள் பார்வைக் குறைபாடு உடையோர், கை, கால் குறைபாடு உடையோர், செவித்திறன் குறைந்தோர் மற்றும் பேச இயலாதவர், மனவளர்ச்சி குன்றியவர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குணமடைந்தவர்கள் என்று ஐந்து வகையினர் உள்ளனர்.

இவ்வுலகில் மானிடராகப் பிறப்பது என்பது மிகவும் அதிஷ்டமானது. அவ் மானிடப் பிறப்பில் ஊனமோ, அங்கவீனமோ ஒரு குறை அல்ல. ஊனம் மற்றும் அங்கவீனம் என்பது அவரவர் மனதில்தான் உள்ளதே தவிர உடலால் இல்லை என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வுலகில் எத்தனையோ மாற்றுத் திறனாளிகள் தம் உடலில் உள்ள அக் குறையை நிறைவாக்கி வாழ்வில் உச்சத்தை அடைந்துள்ளனர்.

அவ்வாறு சாதித்தவர்களில் ஒரு சில உதாரணங்கள் இதோ....

ஐன்ஸ்டின்

இவர் உலகப் புகழ்பெற்ற கணித மேதை மற்றும் இயற்பியலாளர். மூன்று வயது வரையில் பேச முடியாமல் இருந்தார். வளர்ந்த பின்னரும் கூட இவருக்கு பேசுவது சிரமமாகத்தான் இருந்தது. குறிப்பிட்ட காலம் வரையில் தான் இருப்பார் என்று மருத்துவர்கள் கூறியதையும் தாண்டி வாழ்ந்து சாதித்துக் காட்டியவர். இன்று வரையில் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாக விளங்குகிறார்.

ஹெலன் கெல்லர்

சிறுவயதில் ஏற்பட்ட மர்மக் காய்ச்சலினால் பார்க்கும் திறன், பேச்சு, கேட்கும் திறன் உள்ளிட்ட அனைத்தையும் இழந்தார். பின்னர் சைகை மொழியைக் கற்றுக்கொண்டு பிறருடன் தொடர்புகொள்ளத் தொடங்கியுள்ளார்.



பேச்சு மற்றும் செவித் திறனை இழந்தவர்களுள் முதன் முதலில் இளங்கலை பட்டம் பெற்றவர் இவர்.

நாற்பது நாடுகளுக்கு பயணம் செய்து இவரைப் போன்று மாற்றுத்திறன் கொண்ட பலருக்கு சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

இவர் மாற்றுத் திறன் கொண்ட மக்களுக்கான போராளியாகவும் கருதப்பட்டார்.

இவரின் பிறந்த தினமான ஜூன் 27 ஆம் திகதி அமெரிக்காவின் ஹெலன் கெல்லர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

மர்லா ருன்யான்

அமெரிக்காவைச் சேர்ந்த இத் தடகள வீராங்களை பார்வையற்றவர். இவர், மாற்றுத் திறனாளிகளுக்கான 5000 மீட்டர் ஓட்டத்தில் மூன்று தடவைகள் உலக செம்பியன் பட்டம் பெற்றார்.

## ஊனம் மற்றும் அங்கவீனம் என்பது அவரவர் மனதில்தான் உள்ளதே தவிர உடம்பில் இல்லை



மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு நடத்தப்படும் பாரா ஒலிம்பிக் போட்டிகளிலும் பல பதக்கங்களை வென்றார்.

இவ்வாறு பலரின் பெயர்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம். அதிலும் வெளியுலகத்துக்கு தெரியாமல் எத்தனையோ மாற்றுத் திறனாளிகள் சொந்த முயற்சி மற்றும் உழைப்பினால் தமக்கான ஒரு இடத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த டிஜிட்டல் யுகத்தில் மனிதனின் எல்லா பிரச்சினைக்கும் ஒரு முடிவு கிடைக்கிறது. அதாவது பார்வைக் குறைபாடுடன் இருப்பவர்களுக்கு அவர்கள் படிக்கும் விதத்திலான புதுப்புது அம்சங்கள் வந்துவிட்டன.


அதேபோல் அனைத்துக்குமே ஒரு மாற்று வழி கிடைத்துவிட்டது. அவர்களும் சாதாரண மனிதர்கள் போல் வாழ ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆனால், இதை புரிந்துகொள்ள முடியாத ஒரு சிலர் இன்னமும் அவர்களை இயலாதவர்களாகவும் திக்கற்றவர்களாகவும் நோக்குகிறது.

சில வேளைகளில் சமூகத்தின் இவ்வாறான பார்வைகள் அவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கி அவர்களது திடத்தை உடைக்கலாம்.

எனவே இவ்வாறான சிந்தனை கொண்ட மனிதர்கள் ஒரு விடயத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் நம்மை விடவும் திறமையானவர்கள் மனதால் வலிமையானவர்கள் என்று.

எனவே இந்த நாளில் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் மற்றும் அங்கீகாரம் கிடைக்கும் விதத்தில் அவர்களுடன் ஒன்றித்து நாமும் பயணிப்போம்.



# மோட்டார் சைக்கிள் விபத்துகளில் பெண் உட்பட நால்வர் மரணம்

கொழும்பு – நீர்கொழும்பு வீதியின் லியனகேமுல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பகல் நீர்கொழும்பிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்தது வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் அதில் பயணித்த பெண் உள்ளிட்ட சிறு பிள்ளைகள் இருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்தார்.

இதேவேளை, நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளில் பெண்ணொருவர் உள்ளிட்ட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

சீதுவ, பமுனுகம, எம்பிலிப்பிட்டிய மற்றும் கடவத்த ஆகிய பகுதிகளில் மேற்படி விபத்துகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முதுகடுவ, மாரவில பிரதேசத்தை சேர்ந்த 39 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சீதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, எலகந்த – நீர்கொழும்பு வீதியின் தல்தியவத்த பகுதியில் எலகந்தவிலிருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொட்டாஞ்சேனை சங்கமித்த மாவத்தையில் வசிக்கும் 26 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், எம்பிலிப்பிட்டிய – இரத்தினபுரி வீதியின் ஹிங்குரஆர பகுதியில் நேற்றுமுன்தினமிரவு எம்பிலிப்பிட்டியவிலிருந்து இரத்தினபுரி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.


விபத்தில் உயிரிழந்தவர் 36 வயதுடைய எம்பிலிபிட்டிய, நவ நகரய பகுதியைச் சேர்ந்தவர்.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், எம்பிலிபிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காலை கடவத்த அதிவேக நெடுஞ்சாலையில் “சுவத உயன“ சமிக்ஞை கம்பத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முற்பட்ட போது கடவத்தையிலிருந்து சுவத உயன நோக்கி சென்ற கெப் வண்டியொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

விபத்தில் படு காயமடைந்த பின் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடவத்த, கோனஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் கெப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.கடவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# யாருக்கும் வாகன உரிமம் வழங்கப்படமாட்டாது



புதிய அரசாங்கத்தின் கீழ், யாருக்கும் வாகன உரிமம் வழங்கப்படாது என்றும் உரிய கடமைகளுக்கு மட்டுமே வாகனம் வழங்கப்படும் என்றும் ஐந்து வருட முடிவில் வாகனங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டுமென சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் தெரிவித்தார்.

மாத்தறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ், அடுத்த தேர்தலுக்கு முன்னர் அரசாங்கத்தை அதிருப்தி அடையச் செய்யும் அரசியல் தந்திரமாக எதிர்க்கட்சிகள் அரிசி, தேங்காய் இல்லை என குற்றம் சுமத்துவதாகவும் எதிர்க்கட்சிகள் கூறுவதனை மக்கள் நம்பி விடக்கூடாது.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு தீவிரமாக வேலை செய்வதற்கான வாய்ப்பு மழை மற்றும் வெள்ளத்தால் தடைபட்டது வருத்தமளிக்கிறது.

அடுத்த தேர்தலுக்கு முன்னர் அரசாங்கத்தை அதிருப்தி அடையச் செய்யும் அரசியல் தந்திரமாக தேங்காய் இல்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. வாகனங்களுக்கு கதவுகளைத் திறப்பதற்கு வேலையாட்கள் தேவையில்லை. அவற்றை நாம் விரும்பவில்லை என்றார்.

# மோட்டார் சைக்கிள்களை திருடி விற்பனை செய்தவர் கைது

**(எம்.ரீ.ஆரிப்)**

அநுராதபுரம் பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களை திருடி விற்பனை செய்து வந்ததாக கூறப்படும் சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளதாக மிஹிந்தலை பொலிசார் தெரிவித்தனர்.

கனேவெல்பொல பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அநுராதபுரம், எப்பாவல, தம்புத்தேகம மிஹிந்தலை மற்றும் கலென்பிந்துனுவெவ உள்ளிட்ட பல பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களைத் திருடி அதனை விற்பனை செய்து வந்துள்ளதாக பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் இருந்து திருடப்பட்டதாக கூறப்படும் 13 மோட்டார் சைக்கிள்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## லொஹான் ரத்வத்த, மனைவி
# பிணை கோரிக்கை நிராகரிப்பு விளக்கமறியல் நீடிப்பு

சட்டவிரோதமான முறையில் வாகனம் ஒன்றைப் பயன்படுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஆகியோரின் பிணை கோரிக்கையை நுகேகொட பிரதான நீதிவான் திருமதி ருவானி ஜயவர்தன மீண்டும் நிராகரித்துள்ளார்.

இதன்படி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் மற்றும் அவரது மனைவி ஆகியோரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பிரதான நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவியான திருமதி ஷஷி பிரபா ரத்வத்தவின் மிரிஹானவிலுள்ள மூன்று மாடி வீடொன்றில் இலக்கத் தகடுகள் இல்லாத சொகுசு கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

குறித்த கார் தொடர்பில் மிரிஹான பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அது சட்டவிரோதமான முறையில் அசெம்பிள் செய்யப்பட்ட கார் என தெரிய வந்துள்ளது.

ஒக்டோபர் 30 ஆம் திகதி, அந்த காரை பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் லொஹான் ரத்வத்த, மிரிஹான பொலிஸாரால் கட்டுகஸ்தோட்டையில் வைத்து கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் நவம்பர் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பின்னர் ரத்வத்தவின் மனைவி சஷி பிரபா ரத்வத்தவும் நவம்பர் 4ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.குறித்த கார் தொடர்பில் பொலிஸார் முன்வைத்த உண்மைகளை ஆராய்ந்து சந்தேக நபரான திருமதி ரத்வத்தையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

# வீதிப் போக்குவரத்து, பாதுகாப்பு தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு செயற்றிட்டம்





**(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்)**

வீதிப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு குறித்து பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்றிட்டம் எப்பாவல நகரில் நடைபெற்றது.

எப்பாவல பொலிஸ் பகுதிக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் மற்றும் வாகன ஓட்டுநருக்கு பயிற்சிஅளித்தல் தொடர்பில் விரிவுரை மற்றும்செயல்விபரம்என்பனகொழும்புபோக்குவரத்து பொலிஸ் தலைமையக உத்தியோகத்தர் உப பொலிஸ் பரிசோதகர் எம்.சீ.உதய குமார உள்ளிட்டவர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

வீதி விபத்துகள் குறித்தும், முறையான போக்குவரத்து கலாசாரத்தை ஏற்படுத்துவது குறித்தும் பாடசாலை நிர்வாகங்கள் இணைந்து மேற்கொண்டுள்ள செயற்பாடு பெரிதும் பாராட்டத்தக்கதென தம்புத்தேகம கோட்டத்திற்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன குமார தெரிவித்தார்.



இதன் போது அநுராதபுரம் கோட்டத்திற்கு பொறுப்பான போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நியாஸ் எப்பாவல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஐ.எஸ். ஏக்கநாயக்க, எப்பாவல பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# மொழி உரிமைகள் தொடர்பில் அரசியலமைப்பு விதிகள் புத்தளத்தில் செயலமர்வு



**(எம் எச் எம் சியாஜ் )**

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் “மொழி உரிமைகள் தொடர்பான அரசியலமைப்பு விதிகள்“ என்னும் தொனிப் பொருளிலான செயலமர்வு ஒன்று புத்தளத்தில் நடைபெற்றது.

பிரதம விரிவுரையாளராக சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி கலந்து கொண்டு மொழி உரிமை தொடர்பில் அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் தொடர்பில் தெளிவூட்டினார்.

இதில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட சர்வ மதத் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.





# இடதுசாரி கொள்கைகளில் இருந்து விலகிய கட்சியே! தேசிய மக்கள் சக்தி

## அரசியல் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந்த்




கனூஷியா புஷ்பகுமார்

தமிழ் அரசியல்வாதிகள் செய்த தவறினால் தான் பல விடயங்களை தமிழர்கள் இழந்துக்கொண்டிருப்பதாக மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், அரசியல் செயற்பாட்டாளருமான ராஜ்குமார் ரஜீவ்காந்த் தெரிவித்துள்ளார்.

"ஒருவன்" செய்திப்பிரிவுக்கு வழங்கிய விசேட நேர்காணலின் போதே அவர் இவ்விடயத்தை சுட்டிக்காட்டினார்.

**01. காலி முகத்திடல் போராட்ட களத்தின் வெற்றியை தாம் கண்ட ஒரு வெற்றியாகவே தேசிய மக்கள் சக்தி மார்தட்டிக் கொண்டிருக்கிறது. ஜேவிபியின் முகத்தோற்றம் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் பங்குபாடு உண்மையிலேயே காலிமுகத்திடல் போராட்டத்தில் காணப்பட்டதா?**

அரகலய போராட்டம் என்பது பல தரப்பட்ட செயற்பாட்டாளர்கள், மக்கள் இணைந்து கொண்டுவரப்பட்டது. இதில் ஜேவிபியின் பங்களிப்பு குறைவாகவே இருந்தது. அரகலய போராட்டத்தை தனியே ஒரு கட்சி உரிமை கொண்டாடுவது தவறானது. அது உண்மையிலேயே மக்களின் தன்னிச்சை செயற்பாட்டால் ஏற்பட்டது ஆகும்.

**02. அண்மையில் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தல்களுக்கு தற்போதைய அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தாலும், சில நிபந்தனைகளை விதித்திருந்தது. எனினும், தமிழர்கள் கோரும் சுயநிர்ணய உரிமை அதுதானே?**

குறிப்பாக நினைவேந்தல் என்பது தமிழ் மக்களுக்கான உரிமை. அந்த உரிமை அப்படியே இருக்கின்றது. அதனை ஒரு கட்சியாகவும் சரி செயற்பாட்டாளராகவும் சரி நீண்ட காலமாக கூறிக்கொண்டிருக்கின்றோம். இன்று வடகிழக்கில் வாழக்கூடியவர்கள் தமிழ் மக்களின் உறவினர்களே. அந்த உறவினர்கள் அப்படியே அவர்களை நினைவுகூர தமிழ் மக்களுக்கு உரிமை உள்ளது. மறுபுறம் ஜேவிபி அரசாங்கமும் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராட்டம் செய்தது. இன்று அந்த கட்சி ஆட்சி பீடமேறியுள்ளது. இதே கார்த்திகை மாதத்தில் கார்த்திகை வீரர்கள் என இன்றைய ஜனாதிபதியும் சென்று அஞ்சலி செலுத்துகிறார். அப்போதைய அரசாங்கத்தால் தடை செய்யபட்ட கட்சிக்கு அந்த உரிமை வழங்கப்படுகிறது. ஆக, அந்த உரிமை தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். ஜேவிபியினரது நினைவேந்தல்களுக்கு எதுவித தடையும் விதிக்கப்படவில்லை. அதே உரிமை தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

**03. இனவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது ஜனாதிபதியின் வாய்வார்த்தை மாத்திரம் தானா?**

ஒற்றையாட்சி பொறிமுறைக்குள் இனவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது. இனவாதம் என்பது இந்த நாடு சிங்களவர்களுக்கும், பௌத்தர்களுக்கும் சொந்தமானது இதனை இதற்கு முன்னர் இருந்தவர்கள் இதனை அடித்துக் கூறிக் கொண்டிருந்தார்கள். இன்றிருப்பவர்கள் சற்று மென்மையாக கூறுகின்றனர். இது ஒரு பௌத்த நாடாக இருக்கும் ஆனால் நீங்கள் இலங்கையராகுங்கள் என்பதே நிலைப்பாடாக உள்ளது. இனவாதம் என்பது இங்கு கட்டமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு மேம்போக்கு அரசியலாக மாத்திரமே பார்க்கப்படுகிறது.

**04. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் முதலாவது நாடாளுமன்ற கொள்கை விளக்கவுரையில் தமிழ் மக்கள் தொடர்பில் பேசியிருக்கவில்லை. இது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளும் பெரிய ஈடுபாடு ஒன்றை காட்டியிருக்கவில்லை?**

தமிழ் அரசியல்வாதிகளுக்கு பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் விட்ட தவறினால் தான் பல விடயங்களை நாங்கள் இழந்துக்கொண்டிருக்கின்றோம். குறிப்பாக அநுரவின் உரை இந்நாட்டில் மிக நீண்டகாலமாக தேசிய இனப்பிரச்சினை தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன. அதனை புறந்தள்ளும் விதமாக அவருடைய உரை காணப்பட்டது. இந்த விடயங்களை சரியான முறையில் கையாள்வதற்கான தலைவர்கள் எங்கள் மத்தியில் அருகி வருகின்றனர். எனவே, நாங்கள் வெளியிலிருந்தாவது அழுத்தத்தை வழங்க வேண்டிய தேவை உள்ளது. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்று வரையில் அது நடக்கவில்லை. மாறாக விடுதலை செய்யப்பட்ட இருவர் அதே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மீள கைது செய்யப்பட்டுள்ளனர்.

**05. இலங்கை அரசாங்கத்தை பொறுத்த வரையில் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜேவிபி இவை இரண்டும் இணைந்து அரசுக்குள் கட்சி, கட்சிக்குள் அரசு என்ற ஒரு கம்யூனிஸம் சார்ந்த ஒரு போக்கை உருவாக்க வாய்ப்புகள் உள்ளதா?**

முதன்மையான விடயம், தேசிய மக்கள் சக்தி என தற்போது ஆட்சியமைத்துள்ள இந்த கட்சி இடதுசாரி கொள்கைகளில் இருந்து விலகிய ஒரு கட்சிதான். அவர்களை இடதுசாரிகள் என கூறும் அளவிற்கு அவர்களிடம் எந்தவொரு கொள்கைகளும் கிடையாது. இடதுசாரிகள் மதத்தை நோக்கி செல்ல மாட்டார்கள். எனினும் தேசிய மக்கள் சக்தியினர் புத்தரை தூக்கிக் கொண்டு செல்லாத இடமே இல்லை. சரோஜா பேலைக் கூட புத்தரை வணங்க வைத்து தான் அமைச்சுப் பொறுப்பை ஏற்க வைத்துள்ளனர். எனவே, இவர்களுடைய இந்த மதவாத சிந்தனை இடதுசாரிக் கொள்கைக்குள் வராது. தேசிய மக்கள் சக்தியினர் கம்யூனிஸத்தை பின்பற்றாவிட்டாலும், கம்யூனிஸம் தொடர்பிலான ஆசை அவர்களுக்கு உண்டு. இந்த நாடு இதற்கு பிறகு அவர்களின் கைகளில் இருந்து வெளியே சென்றுவிடக்கூடாது என்ற ஆசை அவர்களிடம் உண்டு. ஆனால், இவர்களால் நீண்ட காலம் இந்த ஆட்சியை நடத்த முடியாது. நாட்டில் பல சிக்கல்கள் உள்ளன. பொருளாதார ரீதியான சிந்தனைகளை சரிவர செய்யாவிட்டால் எந்தவொரு வழியாலும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. நிறுவனமயப்படுத்தப்பட்ட ஆட்சி முறை மீது விருப்பம் இருந்தாலும், மக்களை திருப்திப்படுத்த வேண்டிய சரியான விடயங்களை உள்வாங்கி மேற்கொள்ளவில்லை எனின் அவர்களால் ஒரு அடி கூட முன் வைக்க முடியாது.






விசேட நேர்காணலை முழுமையாக பார்வையிட Oruvan யூடியூப் தளத்திற்கு பிரவேசியுங்கள்.



# கிளிநொச்சி டிப்போ ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு





கிளிநொச்சி டிப்போ நிர்வாகத்திலுள்ள பிரச்சினைகளை தீர்க்க வலியுறுத்தி இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி டிப்போ ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். டிப்போவில் இடம்பெறும் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளை உயரதிகாரிகளுக்கு தெரிவித்தும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமையால் தாம் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளதாக ஊழியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# வாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு



வவுனியா, ஓமந்தை – சேமமடு பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (02)ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

ஓமந்தை – சேமமடு பகுதியில் மாலை மாடுகளை பண்ணைக்கு ஓட்டிக் கொண்டு வந்த குடும்பஸ்தர் மீது குழுவொன்று வாளால் வெட்டியுள்ளது. இதன் போது படுகாயமடைந்தவர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாவற்குளம் பகுதியை சேர்ந்த செல்வநிரோயன் (வயது 46) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே வாள்வெட்டுக்கு இலக்காகி பலியானவராவார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மயிலிட்டியில் உலருணவுப் பொதி வழங்கல்



யாழ்ப்பாணம், மயிலிட்டியில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள 65 குடும்பங்களுக்கு, மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தினூடாக உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. மயிலிட்டி – திருப்பூர் ஒன்றியத்தை சேர்ந்த அமரர்களான வேலும் மயிலும் மதுரம் ஞாபகார்த்தமாக கனடா திருப்பூர் ஒன்றியத்தைச் சேர்ந்த மணிவண்ணன் மணிமாலா குடும்பத்தினரால், ஜே251 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட மயிலிட்டி பகுதியில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களில் மழை வெள்ள பாதிப்புகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 65 குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# லாப்ஸ் சமையல் எரிவாயுவிற்காக பருத்தித்துறையில் மக்கள் முண்டியடிப்பு

சீரற்ற காலநிலையை தொடர்ந்து லாப்ஸ் எரிவாயு சிலிண்டருக்கு நாடு முழுதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில்,

யாழ்., பருத்தித்துறையில் லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிய விநியோக வாகனம் ஞயிற்றுக்கிழமை காலை பருத்தித்துறை நகர் பகுதியில் உள்ள முகவர் நிலையங்களுக்கு விநியோக நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தது. இதனை அவதானித்த மக்கள் சிலிண்டர்களை வாங்குவதற்காக வீதிகளில் முண்டியடித்தனர். மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்பட்ட நிலையில் முன்கூட்டியே பதிவு செய்திருந்தவர்கள் அடிப்படையில் சிலருக்கே எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன. இதையடுத்து ஏனையவர்கள் ஏமாற்றத்துடன் மற்றைய முகவர் நிலையங்களில் அலைந்து திரிந்ததை அவதானிக்க முடிந்தது.



# ஓமந்தை-பரசன்குளத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை-பரசன்குளத்திற்கு அண்மையில் நேற்று முன்தினம் மாலை கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர். வவுனியா, ஓமந்தை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவரே கொலை செய்யப்பட்டவராவார் ஓமந்தை, பரசன்குளம் பகுதிக்கு கப் ரக வாகனத்தில் சென்ற குழு ஒன்று கூரிய ஆயுதத்தால் குறித்த நபரை தாக்கியுள்ளனர். இதன் போது காயமடைந்தவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும், தனிப்பட்ட தகராறு காரணமாக இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்தில் வவுனியா, கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டதோடு கப் வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது. ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாம்புகளை அகற்றினாலே வீடுகளுக்கு செல்ல முடியும்

## சங்கானையில் 5 குடும்பங்கள் கோரிக்கை

(கரவெட்டி நிருபர்)

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதாகவும், வீட்டை சுற்றி பாம்புகள் உள்ளதாகவும் , இவற்றை சீர்செய்து வழங்கினால் மட்டுமே தங்களால் வீடுகளுக்கு செல்ல முடியும் என்று சங்கானையில் 5 குடும்பங்கள் தெரிவித்துள்ளனர். சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, ஜே/157 கிராம சேவகர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 20 அங்கத்தவர்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இடம் பெயர்ந்து தங்கியுள்ளோரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். இந்த பிரச்சினை ஒவ்வொரு வருடமும் இடம்பெறுவதாகவும், இதற்கு ஒரு தீர்வு வழங்கப்பட வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# நிவாரணம் வழங்காததால் வாள் வெட்டு

(கரவெட்டி நிருபர்)

நிவாரணம் வழங்கவில்லை எனக்கூறி வடமராட்சி கிழக்கு வத்திராயனில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரின் உறவினர் மீது வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 08.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கிராமத்தில் வசிக்கும் சமூக நலன் சார் செயற்பாட்டாளர் ஒருவர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னாலான பல்வேறு உதவிகளை செய்து வந்துள்ளார்.

இதனால் கோபமடைந்த அதே கிராமத்தை சேர்ந்த மது போதையில் சென்ற நபர் ஒருவர் தனக்கு நிவாரணம் வழங்கவில்லை எனக்கூறி சமூக செயற்பாட்டாளரின் உறவினர் ஒருவரை அந்த சமூக செயற்பாட்டாளர் என நினைத்து வாளினால் வெட்ட முயன்றுள்ளார். அதனை தடுக்க முயன்ற அவருக்கு கைகளில் வெட்டு காயங்கள் ஏற்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இளஞ்சைவப்புலவர்-சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

(கரவெட்டி நிருபர்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் 2025 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாகஅகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் செ. த. குமரன் தெரிவித்துள்ளதாவது,

இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் பின்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி அல்லது சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பாலபண்டிதர் பரீட்சையில் சித்தி அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களை அனுஷ்டித்து வரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் கீழ்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது இளஞ்சைவப்புலவர் தெரிவு அல்லது சித்தாந்த பண்டிதர் தெரிவு அல்லது பண்டிதர் தெரிவு பரீட்சையில் (ஆரிய திராவிடபாசா விருத்திச்சங்கம்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் விண்ணப்ப படிவத்தை இணையத்தில் பெற்று பரீட்சை கட்டணமாக 1200 ரூபாயை இலங்கை வங்கியில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கணக்கு இலக்கம் 1133272 இற்கு வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை சைவப்புலவர் சி. கா. கமலநாதன் தலைவர் அகில இலங்கை சைவப்புலவர், மாசேரி வரணி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

வங்கிப்பற்றுச்சீட்டு விண்ணப்படிவத்துடன் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பிந்திய விண்ணப்பங்கள் மேலதிக அறவீட்டுக்கட்டணம் 300 ரூபாயுடன் 15.01.2025 வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு பிந்திய விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விடயங்களை 0777197067, 0779773538, 0776132176 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

பரீட்சைகள் 2025 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியால நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த குடும்பங்களுக்கு, யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் சமூக செயற்றிட்டத்தின் கீழ் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

# வீதியில் வீசப்படும் குப்பைகளால் சுகாதார சீர்கேடு

மானிப்பாய் மடத்தடி வீதியில் விசமிகளால் குப்பை கூளங்கள் மற்றும் விலங்குக் கழிவுகளை வீதியிலே வீசிச் செல்கின்றதால் வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சௌகரியத்திற்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அவ்வீதிக்கு அருகே வாழும் குடும்பங்களுக்கு தொற்று நோய் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகவும் பிளாஸ்ரிக், தகரப் பேணிகளில் நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

மேலும், வீதியில் உள்ள மின் விளக்குகளும் ஒளிர்வதில்லை.அதனை பிரதேச சபை திருத்தம் செய்வதும் இல்லை எனவும் இது குறித்து பிரதேச சபையின் செயலர் எஸ்.சபேசனுக்கு தெரியப்படுத்திய நிலையிலும் அவர் அதற்கு இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி இல்லாத காலத்தில் அவரது செயற்பாடுகள் விரும்பத்தக்கதாக இல்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## மட்டு.ஓட்டடி முன்மாரி வயற்கண்டம்

# 380 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு



(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்திற்குட்பட்ட ஓட்டடி முன்மாரி வயற்கண்டத்தில் செய்கை பண்ணப்பட்டிருந்த 380 ஏக்கர் நெற்செய்கை, அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் முற்றாக சேதடைந்துள்ளதாக அப்பகுதியிலுள்ள ஆதவன் கமநல அமைப்பின் செயலாளர் சந்திரசேகரன் கருணைராஜன் தெரிவித்தார்.

இந்த பெரும்போகத்தில் நாம் செய்துள்ள நெற்செய்கை அனைத்தையும் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளம் அள்ளிச் சென்றுள்ளது. இதனால் வயல்கள் அனைத்தும் உடைப்பெடுத்து, நெற்பயிர்கள் அனைத்தும் சேதமாக்கப்பட்டு அழுகிப்போய்யுள்ளன. இதனை மீண்டும் பராமரித்து அறுவடை செய்வதென்பது சாத்தியமற்ற விடயமாகும்.

சுமார் 70,000 ரூபாவை ஒரு ஏக்கருக்காக விவசாயிகள் செலவு செய்துள்ளார்கள். இருந்த போதிலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த அழிவுகளுக்குரிய மானியத் தொகையாக 6000 தொடக்கம் 8000 ரூபா வீதம்தான் ஏக்கருக்கு கிடைத்தது. இந்த நிதியை வைத்து எமது விவசாயிகள் விதை நெல்லைக்கூட பெறமுடியாது.

எனவே, எமது விவசாயிகளை அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்காக தற்போது ஆட்சிசெய்யும் அரசாங்கம் நல்ல முறையில் செயற்படும் என அனைவரும் தெரிவிக்கின்றார்கள்.

அதனைச் செயலில் காட்டும் என விவசாயிகளாகிய நாம் நம்புகின்றோம். எதிர்காலத்தில் விவசாயிகளை அழிவிலிருந்து மீட்டெடுத்து வறுமையிலிருந்து விடுபட வைப்பதற்கு அரசாங்கம் உரியவேளையில் மானியத்தொகையை வங்குவதோடு மழை வெள்ளத்தினால் சேதமடைந்துள்ள வயல் நிலங்களையும் புனரமைப்புச் செய்து தரும் என நாம் நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம்



மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஆ.முரளிஸ்வரன் தலைமையில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் இருந்து விழிப்புணர்வுப் பேரணி ஆரம்பமாகி மட்டக்களப்பு நகரச் சுற்றுவட்டம், பஸ்நிலையம், திருமலை வீதி ஊடாக மட்டக்களப்பு பொதுச்சந்தைக்கு சென்று மீண்டும் திருமலை வீதியூடாக தாண்டவன்வெளி வரையில் சென்று அங்கிருந்து பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் வரையில் ஊர்வலம் வருகைதந்தது. இதன்போது எச்.ஐ.வி. தொற்று தொடர்பான அறிவித்தல்கள் வழங்கப்பட்டதுடன் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்த நிகழ்வில். எச்.ஐ.வி., எயிட்ஸ் தொடர்பான பல்வேறு விளக்கங்களும் வழங்கப்பட்டன.

உலக எய்ட்ஸ் தினத்தை குறிக்கும் வகையில் பாதுகாப்பான பாலியல் உறவுமூலம் எச்.ஐ.வி,எயிட்ஸ் நோயை தடுப்போம் என்னும் ஸ்டிக்கர்கள் முக்கிய இடங்களிலும் பஸ்களிலும் முச்சக்கர வண்டிகளிலும் ஒட்டப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் மட்டக்களப்பு தாதிய பாடசாலை மாணவர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், வைத்தியர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் என பல்வேறு தரப்பினரும் பங்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தாய்-சேய் நலத்திட்டம்

# 150 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கி வைப்பு





(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேச செயலகம் மற்றும் நிந்தவூர் பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பரிந்துரையின்படி சுமார் 1 மில்லியன் பெறுமதியான தாய்-சேய் நலத்திட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை சமூக, பொருளாதார மற்றும் கல்வி அபிவிருத்திக்கான அமைப்பின் (முளுநுநுனு) ஏற்பாட்டில் நிந்தவூர் பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தின் மூலம் அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கொண்ட 100 குடும்பங்களும், பொருளாதார ரீதியில் பின்தங்கிய 50 குடும்பங்களும், மொத்தமாக 150 குடும்பங்கள் உதவிபெற்றன. இந்நிகழ்வானது ஓசீட் அமைப்பின் ஸ்தாபகத் தலைவர், சட்ட முதுமாணி மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பி.ரி.ஏ. ஹசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக நிந்தவூர் பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம். றயீஸ் , பிரதம அதிதியாக நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லதீப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், நிந்தவூர் பெரிய ஜ/ம்மா பள்ளிவாசல் தலைவர் , ஓசீட் அமைப்பின் நிறைவேற்று குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலரின் பங்குபற்றுதலால் நிகழ்வு சிறப்பிக்கப்பட்டது.

ஓசீட் அமைப்பின் 25ஆம் ஆண்டு பூர்த்தி விழாவை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்வில் அமைப்பின் செயலாளர் எம்.ஏ.எம். முர்ஷித் நிகழ்ச்சியை தொகுத்தளித்தார்.

## மாவடிப்பள்ளி அனர்த்தம்

# மாணவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்



(பாறுக் ஷிஹான்)

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய நீதி கிடைக்கப்பெற வேண்டும் என “வி ஆ வண்“(WE ARE ONE) அமைப்பின் இணைப்பாளர் முகம்மட் ரஸ்மின் குறிப்பிட்டார். அண்மையில் வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குதல் மற்றும் மாவடிப்பள்ளி அனர்த்தத்தில் உயிரிழந்த மாணவர்களின் ஜனாசா வீடுகளுக்கு சென்று ஆறுதல் கூறிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சில நாடுகள் இராணுவ பயிற்சியை கட்டாயமாக்கி உள்ளன. இயற்கை அனர்த்தங்கள் போன்ற செயற்பாடுகளுக்கு முகம் கொடுப்பதற்காக அந்நாடுகள் இவ்வாறு பயிற்சிகளை கட்டாயமாக்கி வைத்திருக்கிறார்கள். அது அதேவேளை பாடசாலைகளிலும் இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இலங்கையில் பிரபலமான பாடசாலைகளில் நீச்சல் குளங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு நீச்சல் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதர பயிற்சிகள் எல்லாம் உள்ளன. அம்பாறை, மட்டக்களப்பு,வன்னி உள்ளிட்ட சிறுபான்மை மக்கள் உள்ள பகுதிகளிலும் பெரும்பான்மை மக்கள் வாழுகின்ற சேருநுவர போன்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மேற்கூறிய வசதிகளை இல்லை. ஆனால் இங்கு கடல் ஆறு உள்ளன. பயிற்சிப்பாளர்கள் இராணுவத்தினர் அப்பகுதிகளில் மாணவர்களை பயிற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும். விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும். வெள்ள அனர்த்தங்கள் எவ்வாறு ஏற்படுகின்றது, எவ்வாறு தடுப்பது போன்ற திட்டங்களை இதனூடாக மிகச் சிறப்பாக செயல்படுத்த முடியும். இதில் அரசாங்க உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் . இனிவரும் காலங்களில் இவ்வாறான அழிவுகளில் இருந்து பாதுகாப்பு பெற வேண்டும்.

இனிவரும் காலங்களில் பெரிய புயல்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. தற்போது அது தொடர்பான தகவல்கள் வெளியாகி கொண்டிருக்கின்றன. அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை செய்து வருகிறோம். அம்பாறை மாவட்டத்தின் முழு பகுதியும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

# கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் 203ஆவது கொடியேற்ற விழா



(ஏ.எல்.எம்.ஷினாஸ் ,நூறுல் /ஹதா உமர்,முஹம்மத் முக்தார்)

நானிலம் போற்றும் நாகூர் நாயகம், கருணைக் கடல், குத்புல் மஜீத் ஹழ்றத் செய்யிதுனா மஹான் சா/ஹல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்களின் நினைவாக அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர மக்களால் நடாத்திவரும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹுர் ஆண்டகை தர்ஹாவில் 203 வது கொடியேற்று விழா நேற்று (02) ஆரம்பமானது.

கல்முனை முஹ்யித்தீன் ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹுர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் புதிய தலைவர் எம். ஐ அப்துல் அஸீஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.



கல்முனை முஹ்யித்தீன் ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாயலில் இருந்து புனித கொடியானது உலமாக்கள், பக்கீர் ஜமாஅத்தினர், நிருவாகிகள், ஊர்மக்கள் புடைசூழ தீன் கலிமா முழக்கத்துடன் ஊர்வலமாகச் சென்று கடற்கரை பள்ளிவாசல் நாஹுர் ஆண்டகை தர்ஹா மினாராக்களில் ஏற்றி வைக்கப்பட்டது.

# ஆஸ்பத்தரிச்சேனை கண்டத்திற்கு ஆதம்பாவா எம்.பி கள விஜயம்





(ஜௌபர் ஏ. கரீம்)

சீரற்ற காலநிலை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து பாதிக்கப்பட்ட நெற்செய்கை நிலங்களை நேரில் சென்று பார்வையிடுவதற்காக திகாமடுல்ல மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா இறக்காமம் கமநல சேவைக்குட்பட்ட ஆஸ்பத்தரிச்சேனை கண்டத்திற்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டார். ஒரு மாத காலம் செய்கை பண்ணப்பட்ட விளைநிலங்களுக்கான நீர்ப்பாசனக் கட்டமைப்பு மதிப்பிட முடியாத அளவிற்கு ஏற்பட்டுள்ள பாரிய சேதம் காரணமாக சுமார் 600 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை காணிகள் யாவும் மண்மேடுகளாக மாறி உள்ளத்துடன் இதனை அண்மித்த பிரதான பாதைகள், வயல் நிலப்பாதைகள், கால்வாய்கள் யாவும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதனை சீர்செய்யும் வகையில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் அவசர வேண்டுகோளை அடுத்து நீர்ப்பாசன திணைக்களத்தினால் ஆரம்பகட்ட வேலையாக மணல் அகற்றும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது கிழக்கு மாகாண விவசாய காணி மற்றும் கால்நடை அபிவிருத்தி கூட்டுறவுத்துறை அமைச்சின் செயலாளர் எம். எம். நஸீர் நீர்ப்பாசன திணைக்களத்தின் பொறியியலாளர் வீ. கஜன் உள்ளிட்ட இப்பிரதேச விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளிடமும் இதன் பாதிப்பு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்துகொண்டார்.

## நுவரெலியா பிரதேச செயலகத்தில்

# அஸ்வெசும பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்கள்



(டி.சந்ரு- செ.திவாகரன்)

நுவரெலியா பிரதேச செயலகத்தில் வழங்கப்படும் இரண்டாம் கட்ட புதிய அஸ்வெசும விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்வதற்காக ஏராளமான பொதுமக்கள் கடந்த இரண்டு நாட்களாக நீண்ட வரிசையில் காத்திருந்துள்ளனர்.

சனி மற்றும் ஞாயிறு தினங்கள் விடுமுறை என்பதால் நேற்று திங்கட்கிழமை (02) நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு முன்னால் பிரதேச மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

எனினும், குறித்த அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கும் நடவடிக்கை உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை.அத்தோடு வரிசையினை நெறிப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் யாரும் செயற்படவில்லை எனவும் பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களில் நிலவிய வானிலை சீற்றத்தினால் பெய்த கடும் மழை காரணமாக கடந்த வாரங்கள் பொது மக்கள் வருகை சற்று குறைவாக இருந்தது.

தற்போது சீரான காலநிலை நிலவி வருவதனால் பலரும் வருகை தந்ததன் காரணமாக இவ்வாறு நெரிசல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

# மலையக மக்களுக்காக உதவிகளை தொடர்ந்தும் வழங்க வேண்டும்

## இ.தொ.கா தலைவர் ஜப்பான் தூதுவரிடம் கோரிக்கை



மலையக மக்களுக்காக வலுவான உதவிகளை தொடர்ந்தும் வழங்க வேண்டும் என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் இலங்கைக்கான ஜப்பான் தூ துவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பான் தூ துவர் ஸ்சொமடோ அக்கியோவிற்கும் (Isomata Akio) இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமானுக்குமிடையில் மரியாதை நிமித்தமான சந்திப்பு நடைபெற்றது. இச் சந்திப்பின் போதே செந்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது, கடந்த காலங்களில் ஜப்பான் தூதரகம் மலையக மக்களுக்கு பாரிய உதவிகளை வழங்கியது குறித்து செந்தில் தொண்டமான் பாராட்டினார்.

மேலும் புதிய ஜப்பான் தூதுவர் தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ள நிலையில், மலையகத்திற்கு முதல் விஜயம் மேற்கொள்ளுமாறு செந்தில் தொண்டமான் அழைப்பு விடுத்துள்ளார்.



தேசிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் கிழக்கு இணைப்பாளர் அலுவலகம் அநுராதபுரம் நகருக்கு அருகாமையிலுள்ள 55 வீட்டுத்தொகுதி பகுதியில் அமைச்சர் வசந்த சமரசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.
(படம் : அநுராதபுரம் எம். ரீ.ஆரிப்)

## பால்நிலை வன்முறை தடுப்பு:

# விழிப்புணர்வு கருத்தரங்கு



பால்நிலை துஷ்பிரயோகம் மற்றும் வன்முறைகளை தடுக்கும் 16 நாள் உலகளாவிய செயற்பாட்டின் ஒரு கட்டமாக பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பால்நிலை வன்முறையை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வு கருத்தரங்கொன்று கேகாலை மாவட்டத்தில் நடைபெற்றது. இந்த கருத்தரங்கத்தை கண்டி சமூக அபிவிருத்தி நிர்வகம் USAID ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில், கேகாலை மாவட்டத்தில் உள்ள 20 பெருந்தோட்டங்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர். பெருந்தோட்டங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் அடிமைத்தனம், சுதந்திரமின்மை, பால்நிலை வன்கொடுமை, துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தைக் குறைத்து, அவர்களைச் சுயமாக திறம்பட செயல்பட ஊக்குவிப்பதற்கான கருத்துக்களும் செயல்பாடுகளும் இங்கு வழங்கப்பட்டன.

மேலும் இந்த கருத்தரங்கின் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் முறைகள், சட்டரீதியான பாதுகாப்பு மற்றும் அவர்களது உரிமைகள் குறித்து தெளிவூட்டப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெருந்தோட்டப் பெண்கள் மிகவும் ஆர்வமாகவும் செயல்பாட்டில் ஈடுபட்டு, தங்களின் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு பகிர்வதற்கும் முன் வந்தனர்.

# லுணுகலையில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஐவர் வைத்தியசாலையில்

(ராமு தனராஜா)

குளவி கொட்டுக்கு இலக்கான ஐவர் லுணுகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லுணுகலை அடாவத்தை தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 4 பெண் தொழிலாளர்களை நேற்று காலை 11 மணியளவில் குளவி கூடு ஒன்று கலைந்து கொட்டியுள்ளன. இதன்போது அவர்கள் கூக்குரல் இட்ட சத்தம் கேட்டு காப்பாற்ற ஓடிய அடாவத்தை தொழிற்சாலையில் கடமை புரிந்து கொண்டு இருந்த ஊழியர் ஒருவரும் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளார். லுணுகலை அடாவத்தை பகுதியைச் சேர்ந்த 40, 56, 56, 48 வயதுடைய பெண் தொழிலாளர்களும் 29 வயதுடைய ஆண் தொழிலாளருமே இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குளவி கொட்டுக்கு இலக்கான ஐவரும் லுணுகலை வைத்தியசாலையில் வாட்டு இலக்கம் 4 ,5 இல் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ஆர்ப்பாட்ட பேரணி-பொதுக்கூட்டம்








பெண்கள்,சிறுவர்களுக்கான வன்முறைகளுக்கு எதிரான செயற்பாடு வாரத்தை முன்னிட்டு ஆர்ப்பாட்ட பேரணியும் பொதுக்கூட்டமும் கண்டி பன்விலை நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்றது. கண்டி மாவட்ட "பருவக் கீற்று"வலையமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வுகளில், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் திட்டமிடல் முகாமையாளர் கே.யோகேஸ்வரி,பன்விலை பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரியங்கனி ஆகியோர் உரையாற்றினர்.

# குரங்கு பறித்த இளநீர் கழுத்தில் விழுந்து ஒருவர் உயிரிழப்பு

குரங்கு பறித்த இளநீர் குடும்பஸ்தர் ஒருவரின் கழுத்தில் விழுந்ததில், அவர் உயிரிழந்த சம்பவமொன்று புலத்கொ/ஹபிட்டிய, மேல் நியூஸ்மீர், பிரிவு இலக்கம் 3 இல் இடம்பெற்றுள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையான 81 வயதான ஏ.ஜி.ஜயசேன என்பவரே உயிரிழந்துள்ளார். வீட்டுக்கு அருகே இருக்கும் தென்னை மரங்களில் இருந்து விழுந்துகிடந்த தேங்காய்களை எடுத்து கொண்டிருந்த போது, தென்னை மரத்தில் இருந்த குரங்கு இளநீர் ஒன்றை பறித்த போது அந்நபரின் கழுத்து பகுதியில் விழுந்துள்ளது.

அதன் பின்னர் குறித்த நபர் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்

சம்பவம் தொடர்பில் புலத் கொ/ஹபிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பேசாலை பொலிஸ் சிறையில் கைதி தப்பியோட்டம்

கஞ்சா கடத்தல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பேசாலை பொலிஸ் சிறையில் இருந்த நான்கு சந்தேக நபர்களில் ஒருவர் நேற்று முன்தினம் (1) பொலிஸ் பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக பேசாலை பொலிஸார் தெரிவித்தனர்.


தப்பிச் சென்றவர் பேசாலை, பெரியகரிச்சல் பகுதியில் வசிக்கும் 28 வயதுடைய மீனவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கேரள கஞ்சா 6 கிலோ 120 கிராம் கடத்தலுக்காக வைத்திருந்த போது, சந்தேக நபர்கள் மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பேசாலை பொலிஸ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

குளிக்க சென்ற நிலையில் ஒரு கைதி குளியலறையில் தனியாக குளித்து கொண்டிருந்த போது பொலிஸ் அதிகாரி ஒருவர் பாதுகாப்பில் இருந்துள்ளார்.

அச்சந்தர்ப்பத்தில் குளியலறையின் மேல்புற ஜன்னலை உடைத்து கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கெச்சிமலை தர்காவில் வருடாந்த புனித ஸஹீஹுல் புஹாரி



(பீ.எம் முக்தார்)

பேருவளை கெச்சிமலை தர்காவில் வருடாந்த புனித ஸஹீ/ஹல் புஹாரி – முஸ்லிம் மற்றும் மஷ்ரவுர்ரவி ஹதீஸ் கிரந்தங்களில் பராயண மஜ்லிஸின் தமாம் வைபவம் எதிர்வரும் 8ஆம் திகதி (08) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

சங்கைக்குரிய அஷ்ஷெய்ஹ். மௌலவி ஸக்கி அஹ்மத் (அஷ்ரபி) பின் அஷ்ஷெய்ஹ். காலிப் அலவி அலவிய்யத்துல் காதிரி தலைமையில் நடைபெறும். இம் மஜ்லிஸில் ஸாதாத்மார்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், அலவிய்யா தரீக்கா உட்பட ஏனைய தரீக்காக்களின் முர்தீன்கள், நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த முஸ்லிம்கள் பங்குபற்றுவர்.

கடந்த நவம்பர் மாதம் 04ஆம் திகதி அதிகாலை மேற்படி ஹதீஸ் பராயண மஸ்லிஸ் ஆரம்பமானது. வெள்ளிக்கிழமை தவிர தொடர்ந்து 29 நாட்கள் மஜ்லிஸ் இடம் பெற்று இம்மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமாம் வைபவத்துடன் நிறைவு பெறும்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை தமாம் நிகழ்ச்சிகளை 73வது வருடமாக நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் 7ஆம் திகதி தர்காவில் அடக்கப்பட்டுள்ள ஆத்மீக ஞானி அஷ்ஷெய்ஹ். அஷ்ரப் வலியுல்லாஹ் ஸியாரத்தில் ஸியாரத் நிகழ்ச்சியும், கத்தாத் ரதீப் மஜ்லிஸ/ம், துஆப் பிரார்த்தனையும், மார்க்கச் சொற்பொழிவும் நடைபெறும்.

# வவுனியா கொலை சம்பவம்: ஒருவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியா, சேமமடு, இளமருதங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வாளால் வெட்டி ஒருவரை கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் ஓமந்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளமருதங்குளம் பகுதியில் பழைய பகை ஒன்றின் காரணமாக ஐந்து பேர் கொண்ட குழு வவுனியாவிலிருந்து இளமருதங்குளம் பகுதிக்குச் சென்று அங்கு வசிக்கும் 46 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை வாளால் வெட்டி கொலை செய்திருந்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக கூமாங்குளத்தை சேர்ந்த வாகன உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், ஏனைய சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# திருவண்ணாமலையில் மண்சரிவு மீட்புப் பணியில் மோப்ப நாய்கள்



தென்மேற்கு வங்கக்கடலில் உருவான ஃபெங்கல் புயல் கடந்த சனிக்கிழமை (30.11.2024) மாலை 5 மணி அளவில் கரையைக் கடந்தது. இருப்பினும் தமிழகத்தின் பல்வேறு வட மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் திருவண்ணாமலை மலை அடிவாரத்தில் உள்ள வ.உ.சி நகரின் பகுதியில் நேற்று முன்தினம் இரவு திடீரென மண் சரிவு ஏற்பட்டது. இதனால் பல வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. 7 பேரைக் காணவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை, அண்ணாமலையார் மலை, 2,668 அடி உயரம், 14 கி.மீ தூரம் சுற்றளவு கொண்டது. இந்த மலையை ஆக்கிரமித்து, 40 ஆண்டுகளுக்கு மேலாக, 5,000க்கும் மேற்பட்ட அடுக்குமாடி, குடிசை, ஓடு கூரையால் ஆன வீடுகள் கட்டப்பட்டு, 20,000க்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர். ராஜ்குமார் என்பவரது வீட்டின் மேல் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. மொத்தம் ஏழு பேர் இடிபாடுகள் சிக்கி இருப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது.

விழுப்புரத்திலிருந்து சென்ற 30 பேர் கொண்ட தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் தீயணைப்பு துறையினர் ஆகியோர் போலீஸ் பாதுகாப்புடன் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த மண்சரிவில் சுமார் 40 தொன் எடை கொண்ட 14 அடி உயரப் பாறை ஒன்றும் உருண்டுள்ளது.

இது குறித்து தகவல் அறிந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எனப் பலரும் நேரில் சென்று மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தினர்.

அதே சமயம் சம்பவம் நிகழ்ந்த இடம் குறுகலான பாதை என்பதால் ஜேசிபி உள்ளிட்ட கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மரத்தை அறுக்கும் இயந்திரம் மூலம் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். முதற்கட்டமாக வீட்டின் மேற்கூரை உள்ளிட்டவை அப்புறப்படுத்தப்பட்டன. மேலும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் சார்பில் மீட்புப் பணியில் மிசி மற்றும் ரூபி என்ற இரு மோப்ப நாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நிலச்சரிவு அபாயம் உள்ள பகுதியை சுற்றியுள்ளவர்களை மீட்டு, தனியார் பள்ளியில் முகாம் அமைத்து, 15 இற்கும் மேற்பட்டோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# ஈரோட்டில் வங்கிக் கணக்கு ஆவணங்களை விலைக்கு வாங்கி மோசடி 3: இளைஞர்கள் கைது







ஈரோடு அருகே வங்கிக் கணக்கு ஆவணங்களை குறைந்த விலைக்கு வாங்கி மோசடியில் ஈடுபட்ட மூன்று இளைஞர்களை சைபர் கிரைம் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் வசித்து வரும் ராமகிருஷ்ணன் என்பவரிடம் அதே பகுதியைச் சேர்ந்த விஜயன், சத்தியமூர்த்தி மற்றும் ஹரிஹரசுதன் ஆகியோர் வங்கிக் கணக்கு ஆவணங்களை 2500 இந்திய ரூபாய்க்கு பெற்றுக் கொள்வதாக கூறியுள்ளனர். இதனையடுத்து கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு ராமகிருஷ்ணன் தனது வங்கிக் கணக்கு ஆவணங்களை மூவரிடம் வழங்கி பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அந்த மூன்று இளைஞர்களும் ஆவணங்களைப் பெற்று மோசடியில் ஈடுபடும் கும்பல் என ராமகிருஷ்ணனுக்கு தெரியவந்ததையடுத்து நவம்பர் 30ம் திகதி ஈரோடு சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதைத் தொடர்ந்து மூவரையும் சைபர் கிரைம் காவல்துறையினர் பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் திருவாரூரைச் சேர்ந்த கௌதம் என்பவர் வங்கிக் கணக்கு ஆவணங்களை பெற்று தந்தால் அதற்கு அதிகளவு பணம் தருவதாக கூறியதன் அடிப்படையில் இவ்வாறு செயற்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவில் விமான எரிபொருட்களின் விலை அதிகரிப்பு

## விமான கட்டணங்கள் அதிகரிக்க வாய்ப்பு



இந்தியாவில் விமான எரிபொருள் விலையை எரிபொருள் நிறுவனங்கள் அதிகரித்துள்ளன.

இந்த அறிவிப்பினால், ஏற்படும் இழப்பை ஈடுகட்ட விமான நிறுவனங்கள் தமது பயணக்கட்டணங்களை அதிகரிக்கும் நிலை இருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த மாதம் விமானங்களுக்கான எரிபொருள் 2,941 இந்திய ரூபாயால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

அது தற்போது, லீற்றருக்கு 1,318 இந்திய ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டெல்லியில் ஒரு லீட்டர் விமான எரிபொருள் 91,856 இந்திய ரூபாய் 84 சதமாக உயர்ந்துள்ளது

கொல்கத்தாவில் 85,861 இந்திய ரூபாயாகவும், மும்பை மற்றும் சென்னையில் 95,231 இந்திய ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

பாரத் பெட்ரோலியம் கோர்ப்பரேசன் லிமிடெட், இந்தியன் ஒயில் கோர்ப்பரேசன், இந்துஸ்தான் பெட்ரோலியம் கோர்ப்பரேசன் ஆகியவையே விமான எரிபொருளுக்கான கட்டணங்களை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊத்தங்கரையில் வெள்ளப் பெருக்கு அடித்து செல்லப்பட்ட வாகனங்கள்

ஃபெங்கல் புயல் காரணமாக, புதுச்சேரி, விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில கனமழை பெய்தது. நேற்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் அதிகபட்சமாக 503 மி.மீ மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. கனமழை காரணமாக, ஊத்தங்கரை பகுதியில் உள்ள நீர் நிலைகள் நிரம்பி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஊத்தங்கரை பகுதியில் பெய்த கனமழை காரணமாக பாம்பாறு அணை முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில், 15 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. வெளியேறிய வெள்ள நீர், பஸ் ஸ்டாண்ட் அருகே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை அடித்துச் சென்றது. பத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா வாகனங்கள், கார் ஆகியவை இழுத்துச் செல்லப்படும் வீடியோ இணையத்தில் வைரல் ஆகி வருகிறது. இதனால் பொதுமக்கள் ஆற்றில் இறங்கவோ, செல்ஃபி எடுக்கவோ கூடாதென பொதுப்பணித் துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.






# தமிழகத்தில் சிவப்பு எச்சரிக்கை வானிலை ஆய்வு மையம் தெரிவிப்பு

டெல்லி: கர்நாடகாவின் குடகு மாவட்டத்திற்கு இந்திய வானிலை ஆய்வு மையம் நேற்று ரெட் அலர்ட் தெரிவித்துள்ளது. மைசூரு உட்பட 6 மாவட்டங்களில் மிக கனமழைக்கான எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கோவை, நீலகிரி மாவட்டங்களில் நேற்று மிக மிக பலத்த மழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், பெரம்பலூர், திருச்சி, கரூர், மதுரை, விருதுநகர், தென்காசி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரள மாநிலத்தில் நேற்று 5 மாவட்டங்களில் அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு, ஆகிய மாவட்டங்களில் நேற்று அதிகனமழை பெய்யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் 15 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் எதிர்வு கூறியுள்ளது. கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, திருச்சி, பெரம்பலூர், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் டிசம்பர் 4, 5, 6, ஆகிய திகதிகளில் எந்த வானிலை முன்னெச்சரிக்கையும் இல்லை என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# 4000 டிகிரி வெப்பம் வெளிவிடும் புதிய ஏவுகணையின் மறுபக்கம்..!

## அமெரிக்காவை அலறவிடும் புட்டின்...

உலகிலேயே வேறு யாரிடமும் அந்த ஏவுகணை இல்லை என ஏற்கனவே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கூறியிருந்தார். தற்போது அந்த ஏவுகணை குறித்த புதிய புதிய தகவல்கள் வெளியாகி வருகிறது. அந்த வகையில் ஒரேஷ்னிக் ஏவுகணை விழும் இடத்தில் சூரியனின் மேற்பரப்பில் இருக்கும் வெப்பத்தை போல் 4 ஆயிரம் டிகிரி செல்சியஸ் வெப்பம் உருவாகும் என்று புட்டின் எச்சரிக்கை செய்துள்ளார். இந்த வெப்பத்தில் இரும்பு உருகுவதோடு, பாரிய கட்டிடங்கள் அனைத்தும் ஆவியாகிவிடும் என்பதால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் அச்சமடைந்துள்ளன.


உக்ரைனுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவி செய்து வருகிறது. அமெரிக்கா மட்டுமின்றி பிரிட்டன் வழங்கிய ஏவுகணைகளை வைத்து ரஷ்யா மீது உக்ரைன் தாக்குதல் நடத்தி உள்ளது. இதற்கு பதிலடியாக உக்ரைன் மீது ரஷ்யாவும் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைனில் உள்ள டினிப்ரோ நகரின் மீது ரஷ்யா புதிய வகை ஹைப்பர் சோனிக் ஏவுகணையை ஏவி தாக்குதல் நடத்தி உள்ளது. இந்த ஹைப்பர் சோனிக் ஏவுகணையின் பெயர் Oreshnik. இது ஒலியை விட 10 மடங்கு வேகத்தில் செல்லும் திறன் கொண்டதாகும். தற்போது இந்த ஏவுகணை சோதனையை ரஷ்யா தீவிரப்படுத்தி வருகிறது. இந்த ஏவுகணை என்பது உலகில் வேறு எந்த நாடுகளிலும் இல்லை. ரஷ்யாவில் தான் உள்ளது என்று விளாடிமிர் புட்டின் ஏற்கனவே கூறியிருந்தார். அதோடு இந்த ஏ ஒரெஷ்னிக் ஏவுகணை ஒலியை விட 10 மடங்கு வேகத்தில் செல்லும். இந்த வேகம்என்பது மாக் 10 என இது அழைக்கப்படுகிறது.மணிக்கு 12,300 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் திறன் கொண்டது இந்த ஏவுகணை. அதாவது வினாடிக்கு 3.40 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது.

இந்த ஏவுகணை மாக் 10 வேகத்தில் செல்வதால் இடைமறித்து தாக்குவது என்பது கடினமானதாகும். அதுமட்டுமின்றி இந்த ஏவுகணையால் அதிகபட்சம் 5 ஆயிரம் கிலோமீட்டர்(3,100 மைல்) தூரம் வரை தாக்குதல் நடத்த முடியும்.

அதோடு ஒரெஷ்னிக் ஏவுகணையால் அணு ஆயுத தாக்குதலையும் மேற்கொள்ள முடியும். ஒரு ஏவுகணையில் 6 வெடிப்பொருள் அல்லது அணு ஆயுதம் நிரப்பும் றயசாநயனள இருக்கும் என ஏற்கனவே தகவல் வெளியாகி உள்ளது.

இது அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகளை நடுங்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# பாகிஸ்தானில் இரு பிரிவினர் மோதல்: பலி எண்ணிக்கை 130 ஆக உயர்வு

பாகிஸ்தானின் கைபர் பக்துங்வா மாகாணத்தில் ஒரு சமூகத்தை சேர்ந்த இரு பிரிவினர் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நீடித்து வருகிறது. இந்த சூழலில் கடந்த மாதம் 21ஆம் திகதி கைபர் பக்துங்வாவின் குர்ராம் மாவட்டத்தில் ஒரு பிரிவினர் சென்ற வாகனங்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 57 பேர் கொல்லப்பட்டனர். இதை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் இரு பிரிவினருக்கும் இடையே பயங்கர மோதல்கள் வெடித்தன. இதில் இரு தரப்பிலும் ஏராளமானோர் உயிரிழந்த நிலையில் பலர் படுகாயம் அடைந்தனர்.

இதனையடுத்து, இருதரப்பும் பேச்சுவார்த்தை நடத்தி 10 நாள் சமாதான ஒப்பந்தத்தை மேற்கொண்டு ள்ளது. ஆனால் அதை மீறியும் தொடர் ந்து வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. அந்த வகையில் நேற்று இரு பிரிவினருக்கும் இடையே நடந்த மோதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். இதன் மூலம் மொத்த பலி எண்ணிக்கை 130 ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 200ஐ நெருங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




# ஏலியன் வருகை.. குளோனிங் மனிதர்கள்..

# 2025ல் என்ன நடக்கும்? பாபா வங்கா வெளியிட்ட கணிப்பு!

2025 இல் உலக அளவில் என்ன நடக்கும்.. இயற்கை பேரிடர்கள் ஏற்படுமா.. பல நாடுகளில் பெரிய அளவில் சுனாமி, நிலநடுக்கம் எதுவும் ஏற்பட போகிறதா என பிரபல சாமியார் பாபா வங்கா கணித்து இருக்கிறார்.. அந்த கணிப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2025ல் என்னென்ன நடக்கும் என்றும் பாபா வங்கா தனது கணிப்பில் எழுதி வைத்து இருக்கிறாராம். 2025 ஆம் ஆண்டில், மூளை அலைகளைப் பயன்படுத்தி நேரடியாக தொடர்பு கொள்ளும் தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் உருவாக்குவார்கள் என்று பாபா வங்கா கூறியுள்ளார். அதாவது தொலைபேசி மூலம் பேசாமல் நேரடியாக மூளை அலைகள் மூலம் உரையாடும் முறையை விஞ்ஞானிகள் கொண்டு வருவார்கள். இது டெலிபதியின் ஒரு வடிவமாகக் கருதப்படலாம், இது மக்கள் தொடர்பு கொள்ளும் முறையை முற்றிலும் மாற்றும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை 2025 இல் வேற்றுக்கிரகவாசிகளுடனான தொடர்பு பற்றியும் பாவா வங்கா கூறியுள்ளார். அதாவது சூப்பர் பவுல் அல்லது ஒலிம்பிக் போன்ற முக்கிய விளையாட்டு நிகழ்வின் போது இந்த தொடர்பு ஏற்படலாம். இந்த நிகழ்வு மனித குலத்திற்கும் அறிவியலுக்கும் வரலாற்று சிறப்புமிக்கதாக அமையும். மிக முக்கிய நிகழ்வு ஒன்றின் போது நேரடியாக ஏலியன் உடன் நாம் தொடர்பு கொள்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முதலிரவில் தம்பதியுடன் தாய்.. மொட்டை அடித்த மணப்பெண்.. வீரமான தொப்பை ஆண்மகன்..

## அதிர வைக்கும் பழங்குடியினர்

அடிஸ் அபாபா எனப்படும் (ஆபிரிக்கா, எத்தியோப்பிய பசுவின் ரத்தம் குடிக்கும் ஆண்மகனை பற்றியும் சடலத்தை பிய்த்து சாப்பிடும் உறவுகளை பற்றியும் திருமணத்தில் மொட்டை அடிக்கும் மணப்பெண் பற்றி கேள்விப்பட்டதுண்டா? இதெல்லாம் கேட்கவே அதிர்ச்சியும், ஆச்சரியமுமாக இருக்கும் ஆனால் இப்படியான சில பழக்கவழக்கங்கள் இன்னமும் ஆபிரிக்க பழங்குடி மக்களிடம் நிறைந்து காணப்படுகிறது.

ஆபிரிக்கா நாடுகளில் வாழும் பழங்குடியின மக்களி டம் காணப்படும் திருமண நடைமுறையானது, இன்றுவரை உலக நாடுகளுக்கே ஆச்சரிய ங்களை தந்து கொண்டிருக்கிறது. இவர்களில் பலர், இன்றும்கூட வெளி உலகத்துடன் தொடர்பின்றி, காட்டுக்குள்ளேயே வாழ்ந்து வருகிறார்கள். உதாரணத்துக்கு நமீபியாவை எடுத்துக் கொண்டால், வெறும் 50 ஆயிரம் மக்கள்தொகையே உள்ள பகுதியாகும். இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு, சொந்த மனைவியையே விருந்தாக்கும் நடைமுறை உள்ளது. ஆனால், எத்தியோப்பியாவிற்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்தாலும், ஓமோ என்ற பள்ளத்தாக்கிற்கு வருவதற்கு ஆர்வம் காட்டுவதில்லை.. ஏனென்றால், ஒவ்வொரு









வருடம் புத்தாண்டு கொண்டாட்டத்தின்போதும், இங்குள்ள போடோ பழங்குடியின மக்கள் “கேல்” என்ற திருவிழாவை நடத்துகிறார்கள்.

இவர்களின் வழக்கப்படி, யார் பெரிய தொப்பையை வைத்திருக்கிறார்களோ அவர்களே வீரம் செறிந்த ஆணாக கருதப்படுகிறார்களாம்.

# மகனுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய ஜோ பைடன்

அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட தனது மகன் ஹன்டர் பைடனுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பொதுமன்னிப்பு வழங்கினார்.



சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தது, போலி தகவல் வழங்கியது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் ஜோ பைடனின் மகன் ஹன்டர் பைடனை குற்றவாளியாக அமெரிக்க நீதிமன்றம் அறிவித்தது. இதை யடுத்து, ஜோ பைடன் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி மகனை விடுவித்து விடுவாரா? என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில், ஹன்டர் பைடனின் சிறை தண்டனையை பைடன் குறைக்க மாட்டார். அவருக்கு பொது மன்னிப்பு வழங்க மாட்டார் என்று வெள்ளை மாளிகை கூறியிருந்தது.ஆனால் பைடனோ தனது மகன் ஹன்டர் பைடனுக்கு பொது மன்னிப்பு கொடுக்கும் ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், “இன்று எனது மகன் ஹன்டர் பைடனுக்கு பொது மன்னிப்பு வழங்கும் ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளேன். நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றது முதல் நீதித்துறையில் தலையிட மாட்டேன் என்று கூறியிருந்தேன். ஆனால் வீண் பழி சுமத்தி என் மகனை சிறையில் அடைத்தனர். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, என் மகனுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்றார்.

## 8 ஆண்டுகளுக்குப் பின்னர்

# சிரியாவின் அலெப்போவில் நுழைந்த கிளர்ச்சி படைகள்: ராணுவம் பதிலடி



சுமார் 8 ஆண்டுகளுக்குப் பின்னர் சிரியாவின் அலெப்போ நகருக்குள் நுழைந்த கிளர்ச்சிப் படைக்கு எதிராக சிரிய ராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. சிரியாவில் கடந்த 2011 இல் அப்போதைய ஜனாதிபதி பசிர் ஆசாத் ஆட்சிக்கு எதிரான போராட்டம் உள்நாட்டு போராக விரிவடைந்து சிரிய ராணுவத்திற்கு எதிராக கிளர்ச்சிப் படைகள் போரிட்டு வருகின்றன. இதேவேளை சிரிய அரச இராணுவத்திற்கு ரஷ்யா, ஈரான் மற்றும் அதன் நட்பு நாடுகளும் ஆதரவாக சண்டையிட்டு வருகின்றன.

இந்நிலையில், 2016க்குப் பின்னர் முதல் முறையாக கிளர்ச்சிப் படையினர் சிரியாவின் பெரிய நகரங்களில் அலெப்போவிற்குள் நேற்று முன்தினம் நுழைந்த கிளர்ச் சிப் படை வீரர்கள் சிரிய அரசுப் படை யினரின் பாதுகாப்பு அரண்களை தகர்த் தெறிந்ததுடன் அலெப்போ எல்லை கிரா மங்களில் நுழைந்துள்ளனர். இதன் காரணமாக அலெப்போவில் மக்கள் பீதி அடைந்துள்ளனர். இதனால் பாட சாலைகள், அரசு அலுவலகங்கள் மூடப்ப ட்டுள்ளன. மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிளர்ச்சிப் படையை விரட்ட சிரியா இராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. அலெப்போ, இட்லிப் மாகாணங்களில் கிளர்ச்சிப் படை முன்னேற துருக்கி உதவி வருவதாக குற்றம்சாட்டப்படு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐன்ஸ்டீனை தூக்கி சாப்பிட்ட 10 வயது இந்திய பிரிட்டிஷ் சிறுவன்..



10 வயதில் உள்ள குழந்தை கள் எப்போதும் விளையாட்டு தனமாகத்தான் இருப்பார்கள். ஆனால், பிரிட்டன் நாட்டின் மேற்கு லண்டனில் உள்ள ஹவுன்ஸ்லோவைச் சேர்ந்த 10 வயது இந்தியப் பிரிட்டிஷ் சிறுவன் கிரிஷ் அரோராவின் அறிவாற்றலை பார்த்து ஒட்டுமொத்த பிரிட்டனும் வியந்து நிற்கிறது. யார் இந்த கிரிஷ்.. இவரைப் பார்த்து நாடே வியந்து நிற்க என்ன காரணம்.

பொதுவாக IQ எனப்படும் intelligence quotient மூலமாகவே அளவிடப்படும். இந்த கிரிஷ் அரோராவுக்கு சமீபத்தில் IQ சோதனை செய்யப்பட்டுள்ளது.

அதில் அவர் உலகின் தலைசிறந்த அறிஞர்களாகக் கருதப்படும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மற்றும் ஸ்டீபன் ஹாக்கிங்கை தூக்கிச் சாப்பிடும் வகையில் 162 IQ மார்க் பெற்று உலகையே திகைக்க வைத்துள்ளார்.

## இலங்கையுடனான 2ஆவது டெஸ்ட்

# ஜெரால்ட் கோட்ஸி விலகல்!



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜெரால்ட் கோட்ஸி (Gerald Coetzee), இடுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாக இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

இதனால், அவர் ஆறு வாரங்கள் வரை ஓய்வில் இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் இலங்கையுடனான இரண்டாவது டெஸ்டில் அவருக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் க்வேனா மபாகா அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

அவர் இந்த ஆண்டின் தொடக்கத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டி20 போட்டிகளில் சர்வதேச அரங்கில் அறிமுகமானவர்.

இலங்கை – தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது




அதேநேரம், 24 வயதான வலது கை வேகப் பந்து வீச்சாளர், டிசம்பர் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாஸ்தானுக்கு எதிரான அனைத்து வடிவ கிரிக்கெட் தொடரினையும் தவறவிட்டுள்ளதாக தென்னாப்பிரிக்க கிரிக்கெட் நிர்வாகம் கூறியுள்ளது.

இலங்கைக்கு எதிரான டர்பனில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டத்தில் பந்துவீசும்போது காயம் அடைந்த கோட்ஸி, ஸ்கேன் பரிசோதனை மேற்கொண்ட பின்னர், அவரது வலது இடுப்பில் தசைப்பிடிப்பு இருப்பது தெரியவந்தது.

டெஸ்ட் போட்டி டிசம்பர் 5ஆம் திகதி கெபெர்ஹாவில் ஆரம்பமாகி பின்னர் பாகிஸ்தானுடனான மூன்று டி20, மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தென்னாப்பிரிக்கா விளையாடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னிலையில் தென்னாபிரிக்காவுடனான முதல் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியை சந்தித்திருந்த நிலையிலேய அடுத்த போட்டித்தொடர் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாங்கள் போராடிய விதம் மகிழ்ச்சி அளிக்கிறது..!

## பென் ஸ்டொக்

நியூசிலாந்து சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இங்கிலாந்து–நியூசிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்றது. இதில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்த போட்டியில் வெற்றி பெற்ற பின் இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ் அளித்த பேட்டியில் கூறியதாவது, இந்த வாரம் முழுவதும் நாங்கள் போராடிய விதம் மகிழ்ச்சி அளிக்கிறது.

2ஆவது நாளில் 45 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்த போது நெருக்கடிக்குள்ளானோம்.

ஆனாலும் விரும்பிய முன்னிலையை பெற்றது சிறப்பானது. ஹறி புரூக்குக்கு (171 ஓட்டங்கள்) கொஞ்சம் அதிர்ஷ்டமும் இருந்தது. எப்போதும் எதிரணியினர் பிடியெடுப்பை தவற விடும் அந்த போது வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதை ஹறி புரூக் சரியாக செய்தார் என்றார்.




## விமானப்படை விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு கௌரவம்





இலங்கை விமானப்படையின் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் நோக்கில், இலங்கை விமானப்படை சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வீரவீராங்கனைகளை கௌரவடுத்தும் விழா விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ. தலைமையில் விமானப்படை தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது இலங்கை விமானப்படையை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய போட்டிகள் மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றிய 07 விமானப்படை வீர வீராங்கனைகளுக்கு விமானப்படை தளபதியினால் பதவி உயர்வு மற்றும் 3 மில்லியன் ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டன.

இதன்படி, 6ஆவது ஆசிய இளையோர் சம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற சிரேஷ்ட வான்படை வீரர் ஹசித பெரேரா கோப்ரல் நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டதோடு 6வது உலகக் கோப்பை கரம் சம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற விமானப்படை சிரேஷ்ட வான்படை வீரர் கெவின் பீரிஸ், சிரேஷ்ட வான்படை வீரர் நிலையில் இருந்து கோப்ரல் நிலைக்கும், 2024 ஆசிய கிண்ண இருபதுக்கு 20 மகளிர் கிரிக்கெட் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்ற அணியை பிரதிநிதித்துவப்படுத்திய கோப்ரல் அமா காஞ்சனா கதிர ஆராச்சி, கோப்ரல் தரத்திலிருந்து சார்ஜன்ட் தரத்திற்கும் பதவி உயர்த்தப்பட்டார்.

மேலும் விமானப்படை சார்பாக . நீச்சல், ரக்பி, கிரிக்கெட், பளு தூக்குதல், ஜுடோ, கூடைப்பந்து, டேக்வாண்டோ, உடற்கட்டமைப்பு, வுஷு, மரதன் மற்றும் பிற விளையாட்டு நிகழ்வுகளில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் விமானப்படையை பிரதிநிதித்துவப்படுத்திய விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கால்பந்து போட்டி :

# ரசிகர்களுக்கிடையே மோதல்: 100க்கும் மேற்பட்டோர் பலி

கினியாவின் இரண்டாவது பெரிய நகரான என்சரிகோரில் உள்ளூர் கால்பந்து போட்டி ஒன்று நடைபெற்றது. போட்டியை ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் நேரில் கண்டுகளித்த நிலையில் போட்டியின்போது நடுவர் சர்ச்சையான தீர்ப்பு வழங்கியதாக கூறப்படுகிறது.

இதனால் ஒரு தரப்பு ரசிகர்கள் ஆத்திரமடைந்து கால்பந்து மைதானத்தை ஆக்கிரமித்தனர். இதைக்கண்ட மற்றொரு தரப்பினரும் மைதானத்தில் புகுந்து ஒருவரை ஒருவர் தாக்கியதாக கூறப்படுகின்றது. இந்த மோதலானது ஒரு கட்டத்தில் வன்முறையாக மாறி மைதானம் மட்டுமின்றி, மைதானத்திற்கு வெளியேயுள்ள வீதிகளிலும் ரசிகர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். அத்துடன், மைதானம் அருகே உள்ள பொலிஸ் நிலையத்திற்கு தீ வைக்கப்பட்டது. இந்த வன்முறை சம்பவத்தால் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக உள்ளூர் மருத்துவர் ஒருவர் கூறுகையில், "மருத்துவமனையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை உடல்கள் வரிசையாக உள்ளன. பிணவறை நிரம்பியுள்ளது. சுமார் 100 பேர் இறந்துள்ளனர்."என்றார். கால்பந்து போட்டியின்போது ரசிகர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலால் நூறுக்கும் மேற்பட்டோர் பலியான சம்பவம், அந்நாட்டில் பதட்டமான சூழலை உருவாக்கியுள்ளது.






# 520 கோடி கொடுத்தாலும் பும்ராவை ஏலத்தில் வாங்க முடியாது

## - அஸிஸ் நெஹெறா புகழாரம்

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட போர்டர் – கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் 293 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது போட்டி வரும் 6ஆம் திகதி அடிலெய்ட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதன்படி நடைபெற்ற முடிந்த முதல் போட்டியில் ரோகித் சர்மா தனிப்பட்ட காரணங்களால் விலகியிருந்ததால் அவருக்கு பதிலாக பும்ரா அணித்தலைவராக இருந்து இந்திய அணியை மிகச்சிறப்பாக வழிநடத்தி வெற்றியை தேடித்தந்தார். அணியின் தலைவராகவும் பந்துவீச்சாளராகவும் அவர் அந்த போட்டியில் மிகச்சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தி ஆட்ட நாயகன் விருதை வென்றார். இதனால் பலரும் அவரை பாராட்டி வருகின்றனர்.

அந்தவகையில் பும்ராவை போன்ற ஒரு வீரரை எப்போதுமே குறைத்து மதிப்பிட முடியாது. ஒருவேளை பும்ரா ஐ.பி.எல். ஏலத்தில் வந்திருந்தால் ரூ.520 கோடிகள் இருந்தால் கூட அவரை போன்ற ஒரு வீரரை வாங்க முடியாது" என்றார்.



இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால்2024 டிசம்பர் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.